வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர்








Email : news@eelanadu.lk | மலர் : 05 | 25.08.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 238 | பக்கங்கள் : 16


# தமிழரசு கட்சியும் எதிர்காலத்தில் பொது வேட்பாளரை ஆதரிக்கும்!

## நம்பிக்கை வெளியிடுகின்றது ரெலோ தென்பகுதியில் இருந்தும் அழைப்புகள்

வவுனியா, ஓக. 25

**ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளருக்கான ஆதரவு வடக்கு - கிழக்கில் பெருகி வருகின்றது. தென்பகுதியில் இருந்தும் அழைப்புகள் தொடர்ச்சியாக வந்த வண்ணம் உள்ளன என தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தெரிவித்துள்ளது.**



தமிழ் பொதுப் வேட்பாளருக்கு தமிழரசுக் கட்சியில் அதிகமானார் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும் எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சியும் எம்முடன் இணைந்து கொள்ளும் எனவும் ரெலோ நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இந்த கருத்து வெளியிடப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மத்திய குழு கூட்டம், வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

தமிழீழ

15

## வளர்ப்பு பன்றி கடித்து வயோதிபப் பெண் பலி!

### நெடுந்தீவில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 25

நெடுந்தீவில் பன்றி கடித்ததால் படுகாயமுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலைவேளை பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவு 15ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த நாகமுத்து லட்சுமி (வயது 80)

15

## 10 போக்குவரத்துச் சங்கங்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு!

கொழும்பு, ஓக. 25

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்த தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் உட்பட 10 போக்குவரத்துச் சங்கங்கள் ஒன்றிணைந்துள்ளன.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன உள்ளிட்ட சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கொழும்பு பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்

15




## யாழ்ப்பாண கல்லூரி மாணவி வடக்கு மாகாணத்தில் சாதனை

யாழ்ப்பாணம், ஓக. 25

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டி கடந்த ஒரு வார காலமாக துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்று நேற்றுடன் முடிவடைந்தது.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி மகிந்தன் மாதுரி 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் மாகாண ரீதியில் முதலாவது இடத்தையும் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் மாகாண சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்து முதலாவது இடத்தை பெற்றதுடன் 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும்

15

## யாழில் கடும் காற்றினால் 67 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ். மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய இரு தினங்கள் ஏற்பட்ட கடும் காற்று காரணமாக 20 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தரவுகளின்படி 18

15

## பொலிஸார் - கஜேந்திரன் எம்.பி திருக்கோவிலில் வாக்குவாதம்!

### ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க கோரும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகத்துக்கு தடை

அம்பாறை, ஓக. 25



பொலிஸாரின் தலையீடு காரணமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரும் பிரசாரம் இடைநடுவில் கைவிடப்பட்டு தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல்வேளை

15

## 28ஆம் திகதி ரணிலின் மேடையில் ஏறும் தலதா

கொழும்பு, ஓக. 25

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தலதா அத்துக்கோரள, கடந்த பாராளுமன்ற அமர்வில் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததுடன், விரைவில் அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்த உள்ளார் எனத்

15

## கௌரவமாக ரணில் வீடு செல்லவேண்டும்

### திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை

கொழும்பு, ஓக. 25

சஜித் பிரேமதாசவை வீழ்த்த எண்ணாது கௌரவமாக ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு செல்லுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நேற்றைய திஹன மாநாட்டில் கலந்துகொண்டு

15

## வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் சாணக்கியமாக முடிவு எடுப்பர்

### ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 25

தமிழ் பொதுவேட்பாளர் தரப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது எடுபிடிகளாக பயன்படுத்தக்கூடும். வடக்கு, கிழக்கு தமிழர்கள் புத்திக்கூர்மையானவர்கள். அவர்கள் சாணக்கியமான முடிவையே எடுப்பார்கள்." -

என்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

தமிழ் பொதுவேட்பாளர் விவகாரமானது தவறான உபாயம் என்ற தெளிவு அவர்களுக்கு நிச்சயம் வரும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

15

## மரப் பெட்டிகளுக்குப் பதிலாக இம்முறை அட்டைப் பெட்டிகள்

### தயாரிக்கும் பணியும் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 25

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பாரம்பரிய மரப்பெட்டிகளுக்குப் பதிலாக அட்டைப் பெட்டிகளால் செய்யப்பட்ட வாக்குப்பெட்டிகள் மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும், அவற்றை தயாரிக்கும்

15

## ராஜபக்ஷ முகாமுக்குள் மீண்டும் செல்லமாட்டேன்!

### எஸ்.எம்.சந்திரசேன திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 25

அரசியலில் இருந்து விலகும் முடிவை எடுப்பனே தவிர, மீண்டும் ராஜபக்ஷ முகாமுக்குள் செல்வதற்குரிய எண்ணம் என்னிடம் இல்லை என்று ரணில் ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தை பற்றிச்சிந்தித்து சிலிண்டருக்கு வாக்களியுங்கள்

## ஜனாதிபதி ரணில் அறிவுறுத்தல்



அக்கறைப்பற்று, ஒக. 25

**பசியோடு இருந்த மக்களின் துன்பத்தைக் கண்டு, நாட்டைப் பொறுப்பேற்று அந்த மக்களின் பசியைப் போக்கினேன். எனவே, எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்து சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டர் கூட இல்லாத வாழ்க்கைக்குத் தயாராகுங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

நாட்டைப் பொறுப்பேற்க யாரும் முன்வராத பட்சத்தில் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். பின்னர் வீடுகளில் முடங்கியிருந்த மக்களும், இளைஞர்களும் வெளியில் வந்து சுதந்திரமாக நடக்க ஆரம்பித்தனர் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இரண்டு வருடங்கள் கடந்துள்ளதால் மக்கள் அந்தத் துன்பங்களை மறந்திருக்கக் கூடும் என்றும், எனினும் அவ்வாறானதொரு நிலைக்கு மீண்டும் செல்லாதிருக்க சிந்தித்து வாக்களிக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

தேசிய காங்கிரஸ் மாநாடு அக்கறைப்பற்று நீர்ப்பூங்காவில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பசிக்கு இனமோ மதமோ கிடையாது. அதேபோல் கட்சியும் இல்லை. இப்படியான தருணத்தில் நாட்டை பற்றியே சிந்திக்க வேண்டும். நான் நாட்டை பொறுப்பேற்ற போது, ஹாஸ், அரிசி, உரம் போன்ற அத்தியாவசிய பொருட்கள் இருக்கவில்லை. பெரும்போகத்துக்கும் சிறுபோகத்துக்கும் உரமின்றி விவசாயிகள் வீதியில் இறங்கி போராடினர்.

மக்களின் பசியை போக்க வேண்டியிருந்தது. நான் ஜனாதிபதியான பின்னரான எல்லா போகத்திலும் அறுவடை கிடைத்தது. 2025 ஆம் ஆண்டு சிறுபோகத்திலும் நல்ல அறுவடை கிடைக்குமென நம்புகிறோம். ஹாஸ், எரிபொருள் தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்தோம். மக்கள் சுமூகமாக வாழ ஆரம்பித்தனர்.

நான் நாட்டை பொறுப்பேற்று முன்னோக்கி கொண்டு சென்றேன். அப்போது நாட்டை ஏற்க முன்வராதவர்கள் இப்போது என்னைத் துரோகி என்கின்றனர். அப்போது சஜித் எங்கிருந்தார். அன்று ஓட்டத்தை ஆரம்பித்தவர் பாரிஸ் ஒலிம்பிக் வரையில் ஓடி முடித்தார். பிரச்னையை தீர்க்கும் வலுவற்றவர்கள் இப்போது என்னால் முடியாது என்று சொல்வது வேடிக்கையானது. அநுரவை பற்றி பேசுவதில் பிரயோசனம் இல்லை.

எனவே, நாம் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டைக் கட்டியெழுப்புவோம். அன்றைய நிலையை விட இன்று நல்ல நிலைமை உருவாகியுள்ளது. பொருட்களின் விலையை குறைக்க வேண்டியுள்ளது. ரூபாயை பலப்படுத்தினால் அது தானாகவே நடக்கும்.

2023 ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியை 84 டொலர்களாக அதிகரிக்க முடிந்தது. பணவீக்கம் 10 சதவீதமாக குறைந்தது. 300 ரூபாய் வரையில் டொலரின் பெறுமதி குறைந்தது. பொருட்களின் விலை குறைந்தது. உற்பத்தியை 89 பில்லியனாக அதிகரிக்க வேண்டும். 95 பில்லியனாக்குவதே இலக்காகும். அதனால் ரூபாய் வலுவடைந்து, நிவாரணமும் கிடைக்கும். அது தவிர்ந்த வேறு வழிகள் எமக்கு இல்லை.

இதன்போது ஐ. எம். எப் எமக்கு உதவியது. அவர்களின் வேலைத் திட்டத்தின் கீழ் இலக்கை நோக்கிய பயணம் இருந்தது. பணம் அச்சிடவோ, கடன் பெறவோ முடியாத நிலை இருந்தது. வரியை அதிகரித்து வருமானத்தை அதிகரித்தோம். அதனை விருப்பத்தோடு செய்யவில்லை. அதனால் பொருளாதாரம் வலுவடையும் என்பதை முன்பே அறிந்திருந்தேன். ரூபாயின் பெறுமதி அதிகரிக்கும் என்பதையும் அறிந்திருந்தேன். அது சாத்தியமானது.

இந்த ஒப்பந்தங்களை சஜித் மீறினால் என்னவாகும்? திருத்தம் செய்ய வேண்டும் என்கிறார்கள். அதனால் எமக்கான உதவிகள் கிடைக்காமல் போகும். டொலரின் பெறுமதி 400 வரையில் அதிகரிக்கும். சிலவேளை 450 ஆகவும் அதிகரிக்கலாம். பணம் இன்றி எரிபொருளும் இன்றி தேங்காய் எண்ணெய் மூலம் வாகனம் செலுத்த வேண்டியிருக்கும். அப்படியொரு நிலை வேண்டுமா?

இங்கிருந்து முன்னோக்கி செல்வதா பின்னோக்கி செல்வதா? நாட்டைக் கட்டியெழுப்ப இன்னும் மூன்று வருடங்கள் தேவைப்படும். இது உங்களது எதிர்காலம். அதைப் பற்றி சிந்தித்து வாக்களியுங்கள். பழைய அரசியலை விட்டுவிடுங்கள். ஒன்றுபட்டு இந்த பிரதேசத்தை முன்னேற்றுவோம். விவசாயம் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளை முன்னேற்றுவோம்.

அனைத்து இன மக்களையும் ஒரே வகையில் பார்க்கிறேன். முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டதால் அவர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டனர். அந்த தவறை எனது அரசாங்கம் செய்யவில்லை. இருப்பினும், இலங்கை அரசாங்கம் ஒன்றே அந்த தவறை செய்தது என்ற வகையில் எனது அமைச்சரவையும் நானும் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோரினோம். அவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் தீர்மானித்தோம். விருப்பமானவர்கள் தகனம் செய்யவும், நல்லடக்கம் செய்யவும், மருத்துவ கல்லூரிகளுக்கு உடல்களை வழங்கவும் தீர்மானிக்கும் சுதந்திரத்தை வழங்குவதற்கான சட்டமொன்றைத் தயாரிக்குமாறு அமைச்சர் அலி சப்ரியிடம் அறிவுறுத்தியுள்ளேன்.

அதனால் எதிர்காலத்தில் பிரச்னைகள் வராது. ஹக்கீம், ரிஷாத் போன்றவர்கள் ஏன் அதனை செய்யவில்லை. அனைவரையும் ஒன்றுபடுத்தி அரசாங்கமாக இந்த முடிவை எடுத்தோம். முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பேன். தேசிய காங்கிரஸும் அதனைச் செய்யும். அச்சம் கொள்ள வேண்டாம். எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்து சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டர் கூட இல்லாத வாழ்க்கைக்குத் தயாராகுங்கள் - என்றார். (எ)

# அத்துமீறி தொழிலில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக. 25

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை கடற்படையினர் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை கடற்பரப்பில் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இவர்கள் கைதாகினர்.

11 இந்திய மீனவர்களுடன் கைப்பற்றப்பட்ட இழுவைப் படகு கடற்படையினரால் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டதுடன், மேலதிக சட்ட நடவடிக்கைகளை மயிலிட்டி கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 25

நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழா நாட்களில் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் ஓம் நமசிவாய பஜனை குழுவினரின் நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (எ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 25

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திரு விழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திரு முன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

இணுவில் சர்வானந்தமய பீட அமைப்பாளர் கலாபூஷணம் பிரம்மசிறீ ப. சிவானந்த சர்மா தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் பிரதம விருந்தினராகவும் கௌரவ விருந்தினராக சிவப்பணிச்செம்மல், முனைவர் வே. சங்கரநாராயணனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் சற்குணானந்தன் கைலாசநாதன் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்கள ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சாரதாதேவி கிருஷ்ணராஜனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்கள், கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக லலித நர்த்தனாலயா மாணவர்கள் வழங்கும் நடன நிகழ்வும் நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார்.

# மின்மோட்டரை திருத்த முற்பட்ட ஆலயப் பணியாளர் உயிரிழப்பு!

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக. 25

யாழ்ப்பாணம், சுன்னாகம் - சூளானை பகுதியில் உள்ள ஆலயமொன்றில் பிரசாதம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட நபர், வீடொன்றில் மின் மோட்டர் திருத்தச் சென்றபோது மர்மமான முறையில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. குறித்த நபரின் சடலம் நேற்றுச் சனிக்கிழமை உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டது.

சுன்னாகம் - சூளானை பகுதியைச் சேர்ந்த 53 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், திருவிழா நடைபெற்று வரும் இந்த ஆலயத்தின் அருகில் உள்ள வீடொன்றில் மின் மோட்டர் இயங்காத காரணத்தால் ஆலயத்தில் பிரசாதம் தயாரித்துக்கொண்டிருந்த நபரை வீட்டின் உரிமையாளர் அழைத்து, மோட்டரை திருத்துமாறு கேட்டுள்ளார்.

அவ்வேளை, அந்த நபர் திருத்த வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் டெஸ்ட்டரை எடுத்து வருமாறு வீட்டு உரிமையாளரிடம் கூறினார்.

அவர் வீட்டினுள் சென்று டெஸ்ட்டர் எடுத்துக்கொண்டு வந்து பார்த்தபோது, குறித்த நபர் தரையில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

இந்த நிலையில் உயிரிழந்த நபரின் சடலம் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவிரவாக துரித கதியில் போடப்படும் காப்பெற் வீதி

## வீதியின் தரத்தை உறுதி செய்ய உடுப்பிட்டி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 25

யாழ்ப்பாணம், உடுப்பிட்டி - வல்வெட்டித்துறை வரையிலான வீதியின் மீதி பகுதியும் காப்பெற் வீதியாக போடப்படும் வேலைகள் துரித கதியில் இரவிரவாக நடைபெற்று வருகின்றன.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் திட்டம் முன்மொழிவு செய்யப்பட்டிருந்தாலும் வல்வை நாற்சந்தி வரையிலான குறுகிய வீதி தரமாக போடப்பட்டிருந்தது. அதன் பின்பு துரித கதியில் உடுப்பிட்டி சந்தி - சந்தை தாண்டி போடப்பட்டது.

பகலில் போட்ட இந்த வீதியே மேடு பள்ளமாக இருக்கிறது. குறித்த வீதி உரிய தரத்துடன் போடப்படவில்லை என துறைசார் பொறியியலாளர்களே ஒப்புக்கொள்ளும் நிலை உள்ளது.

வல்வெட்டித்துறை சந்தி வரையில் வீதி புனரமைக்கப்படவேண்டி உள்ள நிலையில் திடீரென்று வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் நேற்று முன்தினம் இரவிரவாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒரு மாதத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் வருவதால் தேர்தல் கால அவசர புனரமைப்பாக செய்து வீதி உரிய தரத்துடன் போடப்படவில்லையானால் எதிர்காலத்தில் தாங்கள் அசௌகரியத்தை எதிர்கொள்ள நேரிடும் என உடுப்பிட்டி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மக்களின் வரிப்பணம் உரிய முறையில் செலவு செய்யப்பட வேண்டும்.

துரித கதியில் இரவிரவாக போடப்படும் வீதி ஏற்கனவே போட்டது போல் அல்லாமல் தரமாக போடப்பட வேண்டியது அவசியமாகும்.

தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தும் வீதியை உரிய முறையில் காப்பெற் இட்டு அமைக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# ஏழு வயது சிறுவன் மீது இளைஞன் துஷ்பிரயோகம்

கொழும்பு, ஒக. 25

ஏழு வயது சிறுவன் ஒருவன், இளைஞன் ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக ஹிங்குருகடுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தரம் 2 இல் கல்வி கற்கும் 7 வயதுடைய சிறுவனே பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சிறுவனின் தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாக பொலிஸார் கூறினர்.

பாதிக்கப்பட்ட சிறுவனின் வீட்டுக்கு அருகில் புதிதாக கட்டப் பட்டு வரும் வீடொன்றில் பணிபுரியும் இளைஞனே இந்த சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் இந்த சிறுவனை பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்த நிலையில், சிறுவன் மருத்துவ பரிசோதனைக்காக பசறை ஆதார மருத்துவமனையில் சேர்த்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் இளைஞனை கைது செய்வது தொடர்பான மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# பாதாள கும்பலைச் சேர்ந்த மூவாயிரத்து 400 பேர் கைது

கொழும்பு, ஒக. 25

பாதாள உலகச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக உரு வாக்கப்பட்ட 20 விசேட குழுக்களால் நாடளாவிய ரீதியில் கடந்த 5 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 3,400 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையானது கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது, பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் 3, 411 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# நாட்டில் குரங்கம்மையை கண்டறிய விசேட திட்டம்

## அறிகுறிகள் தொடர்பில் எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 25

நாட்டில் குரங்கம்மை நோய்த் தொற்று பரவலை கண்டறிய விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ளடங்கக்கூடிய வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளதாகவும், இவ்வாறு நோயாளிகள் பதிவானால் அவர்களுக்கு கொழும்பு தொற்று நோய் ஆய்வுப் பிரிவில் சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மஹிபால கூறினார்.

நோய்த் தொற்றாளரின் காயத்தை தொடுவதன் மூலமோ நீண்ட காலமாக நோய்த் தொற்றாளர் சுவாசிக்கும் காற்றை சுவாசிக்க நேரிட்டாலோ இந்த நோய்த் தொற்று பரவக்கூடிய சாத்தியம் உண்டு என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இந்த நோய்த் தொற்று வேகமாக பரவக்கூடிய அபாயம் கிடையாது எனவும், தொற்று நோயாளியின் படுக்கை விரிப்பு மற்றும் ஆடைகள் ஊடாகவே இந்த நோய்த் தொற்று பரவக்கூடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, குரங்கம்மை பாதித்த நோயாளிகளிடம் காய்ச்சல், தோலில் கொப்புளங்கள் உள்ளிட்ட நோய் அறிகுறிகளை காண முடியும் எனவும் அவர் மேலும் கூறினார். (எ)

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 901 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக. 25

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி வரை) 901 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 427 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 450 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சாரதி மாரடைப்பால் மரணம் பல வாகனங்களுக்குச் சேதம்

கொழும்பு, ஒக. 25

கொழும்பு, கொட்டாவ - மாட்டாகொட வீதியில், வான் சாரதி ஒருவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதால் அவர் செலுத்திய வான் பல வாகனங்களுடன் மோதி பெரும் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது பிராடோ ஜீப், வான் மற்றும் லொறியுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

பன்னிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய சாரதியே மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

இவர் தனது அன்றாட வேலைகளை முடித்துக் கொண்டு மாட்டாகொடைக்கு திரும்பிக் கொண்டிருந்த போது திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

விபத்தில் வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டாலும், ஏனைய சாரதிகள் காயமின்றி தப்பினர். இது தொடர்பில் பிலியந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கொழும்பு பேராயரை சந்தித்தார் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ



கொழும்பு, ஒக. 25

ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ, கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு வெள்ளிக்கிழமை கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கான நீதியை வழங்கும் பொருட்டு தன்னால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ, பேராயருக்கு விளக்கமளித்தார்.

ஈஸ்டர் தாக்குதலுக்கான நீதியை பெற்றுக்கொடுக்க தொடர்ந்தும் நடடிவக்கை எடுப்பதாகவும் விஜயதாஸ, பேராயரிடம் தெரிவித்தார். (எ)

# மன்னாரில் இவ்வருடம் இதுவரை 228 டெங்கு நோயாளர்கள் பதிவு

மன்னார், ஒக. 25

மன்னாரில் இந்த வருடம் இதுவரை 228 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அங்கு டெங்கு நோய் அபாயம் அதிகரித்திருப்பதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை நாட வேண்டும் எனவும் மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞான பிரிவு வைத்திய அதிகாரி கதிர்காமநாதர் சுதாகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் இதுவரை 228 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தத் தொகை கடந்த 2023ஆம் ஆண்டை விடவும் இந்த ஆண்டு சிறிதளவு அதிகரித்துள்ளது.

வழமையாக ஒக்டோபர் மாதத் தொடக்கத்திலேயே மன்னாரில் டெங்கு அபாயம் ஏற்படும். ஆனால், இவ்வருடத்தில் சற்று முன்கூட்டியே டெங்கு அபாயம் பரவக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளது. ஆகவே, பொதுமக்கள் அனைவரும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

நீடித்த காய்ச்சல், கண்ணுக்குப் பின்னால் வலி போன்ற நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரிடம் ஆலோசனைகளைப் பெற்று இரத்தப் பரிசோதனைகளை செய்து கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் அரச மருத்துவமனையை நாடுவது மிகவும் சிறந்தது.

தற்போது டெங்கு நோய் பரவல் காணப்படும் இடங்களாக நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள வங்காலையும், மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சாவற்கட்டும் இனங்காணப்பட்டுள்ளது - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கைகள் வெளிப்படுத்தலுக்கு சகல வேட்பாளர்களுக்கும் வாய்ப்பு

## அரசாங்க தகவல் திணைக்களம் புதிய திட்டம்

கொழும்பு, ஓக. 25

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் தமது கொள்கைகளை வெளிப்படுத்த அரசாங்க தகவல் திணைக் களத்தின் ஊடாக வாய்ப்பளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை முதல் இந்த புதிய தீர்மானம் நடைமுறைப்படுத் தப்படும் என அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் தினித் கருணாரத்ன தெரிவித் தார்.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு,

அரசாங்க தகவல் திணைக் களம் எந்தவொரு அரசியல் கட்சிக்கும், வேட்பாளருக்கும் சார்பாக செயல்படவில்லை. அனைத்து வேட்பாளர்களுக் கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து செயல்படுகிறோம்.

தேர்தல் காலத்தில் நடுவு நிலையான தன்மையில் அனை வருக்கும் சமநிலையான வாய்ப் பளிக்கும் வகையில் அரச மற்றும் தனியார் ஊடகங்க ளுக்கு வழிகாட்டல் ஆலோச னைகள் வழங்கப்பட்டுள்ளன.

மக்களுக்கு சரியான தகவல்களை வழங்க வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம்.

வாரத்தில் 7 நாட்களும் காலை 10 மணிக்கு ஒரு வேட் பாளருக்கு ஒரு மணித்தியாலம், பிற்பகல் 2 மணிக்கு பிறிதொரு வேட்பாளருக்கு ஒரு மணித்தி யாலம் என்ற அடிப்படையில் வாய்ப்பளிக்கப்படும்.

அரசாங்க தகவல் திணைக் களம் வழங்கும் இந்த வாய்ப் பைப் பயன்படுத்தும் வேட்பா ளர் தமது தேர்தல் பிரசாரத்தை யும், பிற வேட்பாளர்களுக்கு எதிரான கருத்துக்களை வெளி யிடுவதையும் இந்தச் சந்தர்ப் பத்தில் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் அந்த வேட்பாளர் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம் - என்றார்.

# 2,400 டெங்கு நோயாளர்கள் இம்மாதம் இனங்காணல்!

கொழும்பு, ஓக. 25

ஓகஸ்ட் மாதத்தில் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதி யில் 2,400 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணம் மற்றும் கண்டி மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சமூக விசேட வைத்திய நிபுணர் அனோமா தீப்தி தெரிவித்தார்.

(எ)

# கருத்துக்கணிப்புகளை யாரும் நம்ப வேண்டாம்

## தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஓக. 25

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பல்வேறு தரப்பி னர் மேற்கொண்டுள்ள கருத்துக் கணிப்புகளை நம்பி யாரும் ஏமாற வேண்டாம் என தேர் தல்கள் ஆணைக்குழு, வாக்கா ளர்களிடம் கோரிக்கை விடுத் துள்ளது.

கருத்துக்கணிப்புகளின் அடிப்படையில் தமது கருத்தை மாற்ற வேண்டிய அவசிய மில்லை எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்தார்.

(எ)

# ரணில் ஜனாதிபதியானமை ஆண்டவன் வழங்கிய தீர்ப்பு

## அதாவுல்லா எம். பி. தெரிவிப்பு



அக்கறைப்பற்று, ஓக. 25

இந்த நாட்டில் ஏற்படும் முரண்பாடுகளால் காலத்துக் காலம் பல்வேறு பிரச்னைக ளுக்கு முகங்கொடுத்திருக்கி றோம். ரணில் விக்கிரமசிங்க தனி ஒருவராக வந்து தனித்து நின்று பிரதமராகி ஜனாதி பதியாக தெரிவானார். இது ஆண்டவனின் தீர்ப்பு என்பதை நாம் மறந்துவிட முடியாது என்று பாராளுமன்ற உறுப்பின ரும் தேசிய காங்கிரஸ் தலைவரு மான ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸ் மாநாடு அக்கறைப்பற்று நீர்ப்பூங்கா வில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடும் நெருக்கடியில் இருந்த போது ரணில் விக்கிரமசிங்க, நாட்டை மீட்டுக் கொடுத்துள்ளார். ஒவ்வொரு சமையல் அறைக்கும் ஹாஸ் சிலிண்டர் சென்றிருக்கிறது.

டி. எஸ். சேனநாயக்கவின் காலத்தில் அதிகமான முஸ்லிம்கள் ஐ. தே. கவிலே இணைந்திருந்தனர். பின்னர் அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டது. கடந்த காலங்களில் தேசிய காங்கிரஸ் பல்வேறு அரசியல் தீர்மானங்களை எடுத்துள்ளது. சில சமயங்களில் இந்த ஜனாதிபதிக்கு எதிராகவும் முடிவுகளை எடுத்துள்ளது. ஆனால், இன்று அவருடன் நாட்டுக்காக இணைந்துள்ளோம். நாட்டின் தற்போதைய ஜனாதிபதி சாதாரணமான ஒருவரல்ல. யாரும் முன்வராத நிலையில் தாய் நாட்டைக் காப்பாற்ற வந்த தலைவர். முஸ்லிம் காங்கிரஸ் என்பது வெறும் முறையான அரசியல் கட்சிக்கு அப்பால் தனிநபர்களின் தேவைக்காக செயல்படுகிறது.

இன்றிருக்கும் தலைவர்களின் நாட்டைப் பற்றி முழுமையாக தெரிந்தவர் நமது ஜனாதிபதி. எதிர்காலத்துக்குக் கொண்டு செல்லக் கூடிய தலைவர் நாட்டுக்குத் தேவை. அனைவரது பிள்ளைகளையும் தமது பிள்ளைகளைப் போல அவர் காத்திருக்கிறார். நீங்கள் தான் இந்த நாட்டின் தந்தை என்று ரணில் விக்கிரமசிங்கவை நோக்கி அதாவுல்லா கூறினார்

# ஹக்கீம், ரிஷாத் அரசில் இல்லாததால் இனவாதம் பற்றி யாரும் பேசவில்லை!

## அமைச்சர் அலி சப்ரி கடும் சாடல்



அக்கரைப்பற்று, ஓக. 25

கடந்த இரண்டு வருடங்க ளில் இலங்கையில் ஒரு மாற்றம் நடந்திருக்கிறது. இந்தத் தேர்த லில் எவரும் இன மத பேதங்கள் பற்றிப் பேசவில்லை. ஒற்றுமை யாக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல நினைக்கின்ற னர். ரவூப் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸூம், ரிஷாத் பதியூ தீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் அரசாங்கத் தில் இல்லாதிருப்பதே அதற் குரிய காரணமாகும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸ் மாநாடு அக்கறைப்பற்று நீர்ப்பூங்கா வில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழி செய்திருக்கிறார்.

இதனை மாற்ற வேண்டுமா? என்ற கேள்வியே இன்று உள் ளது. தேர்தலில் எவர் வென் றாலும் பிரச்னையில்லை. ஆனால், அதற்கு பின்னர் நாட்டை யார் கட்டியெழுப்பு வார் என்ற கேள்வியுள்ளது. கோட்டாவுக்கு 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. அன் றும் நானும் அதாவுல்லாவும் மட்டுமே சமூகத்தின் பாது காப்பு கருதி அரசாங்கத்துடன் இருந்தோம். எங்களை குறை சொன்னார்கள். நாம் அந்த அர சாங்கத்தில் இல்லாதிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று யோசிக்கவில்லை. பிரச்னை களுக்கு எவ்வாறு தீர்வு காண லாம் என்று எவரும் சொல்ல வில்லை.

ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது எட்டு பேர் ஒன்று சேர்ந்து அப்போதைய ஜனாதி பதி, பிரதமர், சுகாதார அமைச் சரோடு கலந்துரையாடிய தோடு, இலங்கைக்கு வந்திருந்த இம்ரான் கானுடனும் கலந்து ரையாடினோம்.

இப்போது அவர்கள் பலஸ் தீன நாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப் போகிறார்கள். 1988 களிலேயே பலஸ்தீன நாடு ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. இப்போதும் இவர்கள் பலஸ்தீனை ஏற்பதாக ஒப்பந்தம் செய்வது மக்களை ஏமாற்றும் முயற்சியாகும்.

மலையக மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் கட்சிகள் அவர்களின் சமூகத்தை கட்டி யெழுப்ப கல்வி அமைச்சை கோருகிறார்கள். முஸ்லிம் அமைச்சர்கள் சொந்த பைகளை நிறைக்கவே அமைச்சுகளை கோருகின்றனர். ஆனால், அதா வுல்லா மக்களுக்கான பல சேவைகளை செய்திருக்கிறார். அவருக்கு முஸ்லிம் மக்களின் மரியாதை உரித்தாக வேண்டும்.

அரபு நாடுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும் வரவேற்பு உள்ளது. பலஸ்தீனுக்காக குரல்கொடுக் கும் முஸ்லிம் அல்லாத நாடு களில் இலங்கைக்கு இன்று உயர்வான இடமுள்ளது. ஐ. நாவிலும் பலஸ்தீனுக்காக நாம் குரல் கொடுத்திருக்கிறோம். இலங்கை அரசாங்கம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் களை காஸாவுக்கு வழங்கியது. மக்களிடமிருந்தும் ஒரு மில்லி யன் டொலர்களை வழங்கியது.

காஸாவில் பிரச்னைகள் தீர்ந்த பின்னர் இலங்கை, அங்கு பாடசாலை ஒன்றை அமைத் துக் கொடுக்கவும் தீர்மானித் துள்ளோம். அதனால் ஜனாதி பதியின் வெற்றிக்காக அவரை பலப்படுத்த போகிறோமா அல் லது பொறுப்புக்களை விட்டு ஓடிய சஜித் பிரேமதாஸவுக்கு கொடுக்க வேண்டுமா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்- என்றார்.

(எ)

# மாரடைப்பால் சாரதி மரணம்! மரத்துடன் மோதியது பேருந்து

## மருத்துவ ஆலோசனையை மீறியதால் விபரீதம்

கொழும்பு, ஓக. 25

அம்பாறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்கு வரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று இங்கினியாகல பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட தேவாலஹிந்த பிரதேசத்தில் வைத்து விபத்துக்குள் ளாகி யுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு 7. 30 மணியளவில் இடம்பெற்றது.

சாரதிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்ட நிலையில் குறித்த பேருந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரமொன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதனையடுத்து, சாரதி இங்கினி யாகல மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்ட நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பரகஹகெலே பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த சாரதி ஏற்கனவே சுகவீன முற்று இருந்த நிலையில் பேருந்தில் பயணிக்க வேண்டாம் என மருத்துவர் கள் அறிவுறுத்திய போதிலும் வேறு சாரதி இல்லை என்பதால் இவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டதாக பொலி ஸார் கூறினர்.

இந்த விபத்தின் போது, பேருந்தில் சுமார் 40 பயணிகள் பயணித்த நிலையில் ஒரு பயணிக்கு மாத்திரம் சிறு காயங்கள் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்த னர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.08.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 09

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலும் சஜித்தும்?

ஜனாதிபதித் தேர்தலில் மூன்று பிரதான வேட்பாளர்கள் காணப் படுகின்றனர். இவர்களில் அநுரகுமார திஸநாயக்கவுக்கு ஒப்பீட் டிப்படையில் தமிழ், முஸ்லிம் மற்றும் மலைய மக்களின் ஆதரவை பெறுவது மிகவும் கடினமானது - குறிப்பாக ஈழத் தமிழ் மக்களின் ஆதரவை பெறுவது மிகவும் சவாலானது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், அதிகாரத்தை கைப்பற்றும் போட்டியாளர்களாக, ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவுமே காணப்படுகின் றனர். இவர்கள் இருவருமே கடந்த காலத்தில் தேசிய இனப்பிரச் னைக்கான அரசியல் தீர்வாக சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை பரிசீலிப்பதை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டவர்கள். இவ்வாறு கூறும்போது ·· எப்போது என்னும் கேள்வி எழலாம்.

விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க தலைமையி லான அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தையின்போது, சமஷ்டி அடிப்படையிலான தீர்வை கண்டடைவதற்காக தொடர்ந்தும் செயல்படுவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதுதான், ஒஸ்லோ இணக்கப்பாடு எனப்படுகின்றது. பேச்சுவார்த்தை காலத்தில் ரணில் அரசாங்கத்தில் சஜித் பிரேமதாஸவும் ஒரு முக்கிய நபராவார். ஐக் கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர். அப்போது, இது தொடர்பில் சஜித் பிரேமதாஸ எதிர்ப்பு வெளியிடவில்லை.

இந்திய - இலங்கை உடன்பாடு தொடர்பில், தனது தந்தையார் ரணசிங்க பிரேமதாஸ, ஜே.ஆர்.ஜெயவர்தனவுடன் முரண்பட்டது போன்று சஜித் பிரேமதாஸ முரண்படவில்லை. ரணிலுக்கு ஒத்து ழைப்பு வழங்கியிருந்தார். அவ்வாறாயின் கொள்கையளவில் சஜித் பிரேமதாஸ சமஷ்டியை எதிர்க்கவில்லை என்றுதானே நாம் பொருள் கொள்ள வேண்டும்.


ஆனால் இன்று என்ன நடக்கின்றது? இரண்டு வேட்பாளர்களுமே சொல்லி வைத்தவர்கள் போன்று, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் பேசுகின்றனர். அவ்வாறாயின் முன்னர் எந்த அடிப்படையில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை பரி சீலிக்க இணங்கியிருந்தனர்? அன்று ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த விடயத்தை ஏன் இன்று ஏற்றுக்கொள்ள முடியவில்லை? சமஷ்டி அன்று சரியென்றால் இன்றும் அது சரியாகத்தானே இருக்க வேண்டும்? இது தொடர்பில் ரணிலும் சஜித்தும் தமிழ் மக்கள் முன்னிலையில் ஒரு பகிரங்க விவாதத்தை எதிர்கொள்ள முடியுமா?

அல்லது அன்று, விடுதலைப் புலிகள் இயக்கம் தனிநாட்டுக் கோரிக்கையுடன் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தமையால்தான், ரணில் சமஷ்டியை பரிசீலிக்க இணங்கியிருந்தாரா - அதுதான் சஜித்தும் அமைதியாக இருந்தாரா? அவ்வாறாயின் அனைத்தும் இங்கு பலத்தினால்தானே தீர்மானிக்கப்படுகின்றது. இது எதனை உணர்த்துகின்றது? தமிழ் மக்கள் ஓர் அரசியல் சக்தியாக இருந் தால் மட்டுத்தான், எவரும் தமிழ் மக்களை திரும்பிப்பார்ப்பார்கள் - இல்லாவிட்டால், தமிழ் மக்களை எவருமே திரும்பிப்பார்க்கப் போவதில்லை. இதுதான் அரசியல் யதார்த்தமாகும். இந்த யதார்த் தத்தை புரிந்துகொண்டு செயலாற்றினால் மட்டுமே, தமிழ் மக்க ளுக்கான அரசியலை பாதுகாக்க முடியும். தமிழ் மக்களுக்கான அரசியல் என்பதுதான், இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கான தனித்துவமான அரசியல் இருப்பாகும். இந்தப் பின்புலத்தில்தான் தமிழ் பொது வேட்பாளர் முக்கியத்துவம் பெறுகின்றார். மற்றும்படி அவர் யார் - அவருடைய கருத்துக்கள் எத்தகையது என்பதெல்லாம் ஒரு பிரச்னைக்குரிய விடயமல்ல.

## நல்லூரான் திருவடி - 17

# தங்க நாணயங்களை பரதேசியாருக்கு பரிசாக வழங்கிய யோகர் !

**ஆனந்த பெரேரா**



1925ஆம் ஆண்டு ஆடி மாதம். நாகலிங்க பரதேசியார் என்பவர் பண்ணிசை பாடுவதிலும், கதாப்பிரசங்கம் செய்வதிலும் புகழ் பெற்று விளங்கினார். மெய்யுருகப் பாடுவதில் வல்லவர். பிற்காலத்தில் முதுமையும், நோயும், வறுமையும் பீடித்ததனால் தளர்வுற்றார். யோகர் சுவாமியைப்பற்றி கேள்வியுற்று அவரைத்தரிசிக்க வாடகைக்காரொன்றில் அவரது ஆச்சிரமத்துக்கு வந்திருந்தார்.

அவர் வந்த வாகனம் படலையில் நின்றது. யோகர் அவர் வந்த மோட்டார் கார்வரை சென்று காரிலிருந்த நாகலிங்கத்தாரை தனது கரங்களால் அணைத்தபடி அழைத்து வந்து தமது ஆசனத்தில்

அமர்த்தினார். ஆயினும் சுவாமிகளின் அந்த ஆசனத்தில் அமர பரதேசியார் மறுத்தார். இருப்பினும், சுவாமிகள் கேட்டுக்கொண்டதை மறுக்க முடியாது, அவரது ஆசனத்தில் பரதேசியார் அமர்ந்தார்.

அப்போது யோகர் தரையிலமர்ந்தார். இதனைக்கண்ட அங்கிருந்த அடியவர்கள் சுவாமிக்கு வேறு ஆசனம் கொடுத்தனர். சில நிமிடங்கள் மௌனம் நிலவியது. இதன்பின்னர் பரதேசியாரை தேவாரம் பாடும்படி யோகர் கேட்டார். ஆனால் பரதேசியார் பாடாது தாமதித்தார். அப்போது அவரது மனதை அறிந்த யோகர், 'இடரினும் தளரினும்' என்ற சம்பந்தருடைய தேவார அடிகளைக் கூறவே, பரதேசியார் அத்தேவாரத்தை திருச்சிற்றம்பலம் என்று கூறி பாடினார்.

அவர் மிகுந்த பரவசத்தோடு கண்ணீர் சொரிந்தவராக அப் பாடலைப்பாடினார். அப் பாடலை சுவாமியோடு இருந்தவர்களும் மனமுருகிக்கேட்டனர்.

எட்டாம் திருப்பதிகம் பாடும்போது படலையில் மோட்டார் கார் ஒன்று வந்து நின்றது. ஓர் இளம் தம்பதியினர் அக்காரிலிருந்து இறங்கி, நேராக கிணற்றடிக்குச் சென்று கை, கால்களைக் கழுவிய பின்னர் வந்து யோகரை வணங்கி அவர் முன்பாக தரையில் அமர்ந்தனர். அவர்கள் கொண்டு வந்திருந்த தாம்பாளத்தில் பூசைப் பொருட்களுடன் ஒரு பட்டுப்பை முடிச்சும் இருந்தது.

யோகர் அப்பட்டுப்பை முடிச்சை எடுத்து நிலத்தில் கொட்டினார். அப்போது 'கலீர், கலீர்' என்ற ஓசையோடு அந்த பட்டுபை முடிச்சிலிருந்து தங்க நாணயங்கள் தரையில் வீழ்ந்தன.

சுவாமிகள் பரதேசியாரை நோக்கி, “ நீர் இடரினும் தளரினும் என்ற தேவாரத்தைக் கேட்ட அம்மையும்; அப்பனும் கைலாயத்திலிருந்து உமக்கு பண்சுமந்த பாடல் பரிசை அனுப்பி வைத்துள்ளனர்” என்றுகூறினார்.

அப் பொற்கிளி முடிச்சைக் கொண்டு வந்தவர் சிங்கப்பூரில் டாக்டராகப் பணி புரிபவர். ஒவ்வொரு மாதமும் அப் பட்டுப்பையில் அவர் சில தங்க நாணயங்களைப் போட்டு நூறு பவுண்கள் சேர்ந்ததும் அவற்றை சுவாமிக்கு கொடுக்கவென தீர்மானித்து, அவ்வேளையில் சுவாமிகளது ஆச்சிரம குடிலுக்கு தமது பாரியார் சகிதம் வந்திருந்தார். அப்பொற்காசு முடிச்சை பரதேசியாருக்கு கொடுத்த பின்னர் “இடரினும் தளரினும் பாடி சம்பந்தர் பொற்கிளி பெற்றார்.

அத் தேவாரத்தைப் பாடிய பரதேசியாருக்கும் பொற்கிளி கிடைத்தது” என்று கூறி யோகர் சிரித்தார்.

இதனை அச்சமயம் கண்ட ஆச்சிரமத்திலிருந்த அடியார்கள், “அற்புதம், அற்புதம்” என்று மெய்மறந்து கூறினர். அச்சமயம் வெளியே தென்னை மரத்தடியில் சாய்ந்து நின்ற சிங்கள மோட்டார் கார் சாரதிக்கும் யோகர் ஒரு தங்க நாணயத்தைக் கொடுத்தார்.

இதன்பின்னர் பரதேசியாரை நோக்கி, “நீர் இவ்வளவு காலமும் பாடும் பணியல் ஈடுபட்டு உமது உடல் இளைத்துப்போய் விட்டது. உமது பாடும் பணிக்குப் பரிசாக இறைவன் இப் பொற்காசுகளை அனுப்பி வைத்துள்ளான். ஆகவே, இனி நீர் ஆறுதலாக இருக்கவேண்டும். உசன் ஆச்சிரமத்திற்குச் சென்று தங்கி, அங்கே ஆறுதலாக இருந்துகொள்ளும்” என்று பரதேசியாருக்கு உபதேசித்தார் யோகர்.

யோகர் கூறியதை சிரமேல் தாங்கியவராக உசன் ஆச்சிரமத்தில் சென்று தமது இறுதி நாட்களைக் கழித்து அங்கிருந்தே பரதேசியார் இறையடி சேர்ந்தார்.

**தொகுப்பு : அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்டிக் துண்டுகள் தங்கச் சில்லுகளாவது எப்படி?

எம். பாண்டியராஜன்

இந்தக் கதை இப்போது தேவையா? இருக்கட்டுமே, ஒய்வாகப் படித்துதான் பார்க்கலாமே. ஒரு கதையைத் தெரிந்துகொள்வதில் என்ன தவறு இருந்துவிடப் போகிறது? பணக்காரர் ஆவதென்றால் சும்மாவா?

என்னிடம் 100 சில்லுகள் இருக்கின்றன, பிளாஸ்டிக்தான். சட்டப்படி என்னால் 75இற்கும் அதிகமாகக் கையில் வைத்துக்கொள்ள முடியாது, எனவே 73ஐ மட்டும் வைத்துக்கொண்டேன். மீதி 27 சில்லுகள் சந்தையில் விற்கப் பட்டுவிட்டன.

15 சில்லுகளை திருவாளர் பொது ஜனங்களைப் போலவே காட்டிக் கொண்டு என்னுடைய நெருங்கிய உறவுக்காரர்களே - சித்தப்பாக்கள் என்று வைத்துக்கொள்வோம் - வாங்கிக் கொண்டனர். இது தப்புதான், என்றாலும் யார் என்னைக் கண்டுகொள்ளப் போகிறார்கள்?

ஆக, சந்தையில் 12 சில்லுகள் மட்டும் இருக்கின்றன. இவற்றில் 9 சில்லுகளை எல்.ஐ.சி. மாதிரியொரு நிறுவனம் வாங்கிக் கொண்டது. மீதி 3 சில்லுகள்தான் வெளிச் சந்தையில் விடப்பட்டிருக்கின்றன.

என்னுடைய ஊடகங்களும் அரசியல் தொடர்புகளும் மக்கள்தொடர்பு ஏற்பாடுகளும் ஆகப் பிரமாதமானவை. எனக்கு ராஜாவுடன் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக நிறைய கிசுகிசுக்களும் உண்டு. என்னுடைய சித்தப்பாக்கள், பொது ஜனங்களைப் போலவே தொடர்ந்து, பங்குகளை வாங்குவார்கள், விற்பார்கள், மீண்டும் வாங்குவார்கள், மீண்டும் விற்பார்கள். இதன் மூலம் என்னுடைய பங்குகளுக்கு எக்குத்தப்பான டிமாண்ட் இருப்பதாக நிஜமான பொதுஜனங்களும் நிறுவனங்களும் நம்புமாறு செய்வார்கள், அதாவது அப்படியாகப்பட்ட நிலைமையை உருவாக்குவார்கள்.

ரூ. 2 மதிப்புள்ள பிளாஸ்டிக் சில்லுகள் ரூ. 10-க்கு விற்கப்பட்டன. ரூ. 12, 13, 15 விலைக்கு வாங்க மக்கள் போட்டி போட்டார்கள். என்னுடைய சித்தப்பாக் களோ சில்லு விலையை உயர்த்தினார் கள், ரூ. 100 கொடுத்து வாங்கினார்கள். இப்போது மக்களோ ரூ. 105, 106, 108 விலைக்கு வாங்கப் போட்டி போட்டார் கள். இப்போது சித்தப்பாக்களோ ஒவ் வொன்றையும் ரூ. 500 விலை கொடுத்து வாங்கினார்கள். நம்ம மக்களோ 510, 520 கொடுத்து வாங்க சண்டை போடத் தொடங்கிவிட்டார்கள்.

என்னிடம்தான் ஏற்கெனவேயுள்ள 73 சில்லுகளும் அப்படியேதானே இருக்கின்றன. அவற்றின் தொடக்க விலை அல்லது அடக்க விலை ரூ. 2 தானே. ஆனால், இப்போது அதன் சந்தை மதிப்பு ரூ. 520! பொழுதுபோகவில்லை என்றால் பெருக்கிப் பாருங்கள். நம்ம ரேஞ்ச் தெரியும். நிறுத்தாதீங்க. அடுத்து வாங்க.

இப்போது நான் வங்கிக்குச் செல்கிறேன். என்னிடமுள்ள 73 சில்லுகளில் 20-ஐ (ஒவ்வொன்றின் சந்தை மதிப்பும் ரூ. 520) அடமானம் வைத்து, ஒரு சில்லுக்கு ரூ. 300 வீதம் கடன் வாங்கினேன். அதை அப்படியே சித்தப்பாக்களிடம் கொடுத்தேன். அதை வைத்து அவர்கள் மீண்டும் சில்லுகளை வாங்கி, விற்கத் தொடங்கினார்கள். இப்போது விலை ஒவ்வொன்றும் ரூ. 1000!

இப்போது என்னிடமிருந்த இன்னொரு 20 சில்லுகளை மற்றொரு வங்கியில் அடமானம் வைத்து, ஒவ்வொன்றுக்கும் ரூ. 600 கடன் வாங்கினேன். அந்தத் தொகையையும் மறுபடியும் சித்தப்பாக்களிடம் கொடுத்தேன். அவர்கள் மீண்டும் சில்லுகளை வாங்கி விற்கத் தொடங்கினார்கள். இப்போது ஒரு சில்லு விலை ரூ. 1500!

அடுத்து இன்னொரு 20 சில்லுகளை மற்றொரு வங்கிக்குக் கொண்டுபோய் அடமானம் வைத்து ஒவ்வொன்றுக்கும் ரூ. 1000 கடன் பெற்றேன். இப்படியாகக் கொஞ்ச காலத்தில் என்னுடைய 2 ரூபாய் சில்லுகள் எல்லாம் வங்கிகளிடம் அடமானத்தில்! வங்கிகளிலுள்ள உண்மையான பணம் எல்லாம் என்னிடத்தில்!!

இப்போது இந்த உண்மைப் பணத்தைக் கொண்டு என்னால் மற்றவர்களுடன் போட்டி போட்டு எதை வேண்டுமானாலும் - துறைமுகங்கள், விமான நிலையங்கள், கிடங்குகள், மின்னுற்பத்தி நிலையங்கள், சிமெண்ட் ஆலைகள் - விலைக்கு வாங்க முடியும்.

இவற்றை வாங்குவதற்கும்கூட மொத்த பணத்தையும் நான் அப்படியே கையில் தர வேண்டும் என்பதில்லை. என் செல்வாக்கின் மீது மதிப்பு வைத்து வங்கிகளே தாங்களாகவே முன்வந்து கடன்களையும் தருகின்றன.

என்ன, இவை எல்லாவற்றுக்கும் ராஜாவின் அனுக்கிரகமும் அரவணைப்பும் ஆசிர்வாதமும் இருக்க வேண்டும். அப்படியென்றால்தான் அரசின் சொத்துகள் தொடர்ந்து விற்பனைக்கு வரும், நானும் வாங்கிக் குவிக்க முடியும் அவை எனக்கு இருக்கின்றன.

இந்தக் கதையை எல்லாம் யாரோ ஒரு வெளிநாட்டுக்காரர் சொல்லி, நம்ம ஊர்க்காரர்கள் எல்லாருக்கும் புரிய வைக்க முயலுகிறார் என்றால்... நம்ம ராஜாவுடைய குடிபடைகள் எல்லாமும் திரண்டு இது பெரிய வெளிநாட்டு சதி, ராஜாவைக் கவிழ்க்க முயலுகிறார்கள் என்று கூக்குரலிடாமல் என்ன செய்வார்கள்?

இல்லாவிட்டால் என்னவாகும்? என்னுடைய இன்றைய தங்கச் சில்லுகள் எல்லாம் மறுபடியும் பீஸூக்கு ரெண்டு ரூபாய் என பிளாஸ்டிக் துண்டுகளாக மாறிவிடும் அல்லவா?

கடந்த வாரத்தில் சமூக ஊடகங்களிலும் வலம் வந்தது இந்தக் கதை. கதையைப் படித்துவிட்டீர்கள்தானே, முடிந்தால் முயற்சி செய்யுங்கள், நீங்களும் பணக்காரராகலாம், டாப் 10இல் வராவிட்டாலும் டாப் 100இல்!

## இந்தவார ராசிபலன் 25.08.2024 - 01.09.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 09
நல்ல நேரம்: 9.05 - 10.35 ராகு காலம் : 4.35 - 06.05 திதி : ஷஷ்டி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

தனவரவு அதிகரிக்கும். நினைத்த காரியங்கள் நினைத்தது போல் நடக்கும். புத்தி சாதுர்யம் மற்றும் வாக்குவன்மையால் பொருளாதார நிலை மேம்படும். தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். புதிய வீடு, பூமி வாங்கும் முயற்சிகள் வெற்றி பெறும். அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். எதிர்பார்த்த இனங்களில் இருந்து வரவு ஏற்படும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும் தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். எதிலும் எடுத்தோம் கவிழ்த்தோம் எனச் செயல்படாமல், எதையும் ஆலோசித்துச் செயல்படுவது நல்லது. அரசுப் பணியில் உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அலுவலகத்தில் பதவி உயர்வில் பிரச்னைகள் எழலாம். தொழிலில் முன்னேற்றம் காண முயல்வீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடி வரும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பழைய கடன்கள் சுலபமாக வசூலாகும். தந்தை வழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள். பணவரவு அதிகரிப்பால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும். வழக்குகளில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். மற்றவர்களுக்கு நல்லது செய்வதன் காரணமாக உங்கள் கீர்த்தி பெருகும். சுயதொழில் புரிவோர் தங்கள் பணிகளை திறம்பட செய்வார். மாணவர்கள் கருத்தோடு படித்தால் முன்னேற்றம் காண்பர்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். தாய்வழி உறவுகள் உதவி செய்வார்கள். சுபகாரிய நிகழ்வின் மூலம் வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும் இனிய பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் இனிய பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். அதனால் வீட்டில் இன்பம் நிலைத்திருக்கும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். குடும்பத்திற்காக உங்கள் சந்தோஷங்களை தியாகம் செய்வீர்கள். சிலருக்கு மனைவி, மக்களின் உடல் நிலையில் ஏற்படும் ஆரோக்கிய குறைவு மூலம் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். அரசு ஆதரவு, அரசியல்வாதிகளின் ஆதரவு இருக்கும் அதிகாரம் மிக்க பதவி உயர்வு ஏற்படலாம்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் இருக்கும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு உழைத்தால் தான் அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்கும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். தேவையற்ற ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்கள் கடன் வாங்கும் நிலையைத் தவிர்க்கலாம்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலருக்கு பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். தேவையற்ற பேச்சுக்களைத் தவிர்ப்பது நல்லது.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலருக்கு பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் புதுத் தெம்பும், உற்சாகமும் கூடும். வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். ஆணையிடும் அதிகார பதவி கிடைக்கும். சிலருக்குக் கல்வியில் முன்னேற்றம் ஏற்படலாம். மேல் படிப்புக்காக வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். சுபகாரியங்கள் நடைபெறும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் குடும்பத்தில் திடீர் சுபகாரியங்கள் நடப்பதன் காரணமாக சுபவிரயங்கள் அதிகரித்து, செலவுகள் கூடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். தெய்வ பலம் கூடும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். வாலிப வயதினருக்கு வலுவான அரசு உத்தியோகம் ஏற்பட வாய்ப்புண்டு. அரசு அதிகாரிகளுக்கு எதிர்பாராத இடமாற்றங்கள் ஏற்படலாம், தொழில், வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வருமானங்கள் உயரும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]


இந்த வாரம் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும் . பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சிலருக்கு சோம்பேறித்தனம் அதிகரிக்கும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நல்ல வேலை வாய்ப்புகள் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு

# வாக்குறுதியை இனிமேலும் மக்கள் நம்புவார்களா?





வீரகத்தி தனபாலசிங்கம்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு ஜனாதிபதி தேர்தல்களில் பிரதான வேட்பாளர்களின் முக்கியமான வாக்குறுதியாக விளங்கிய ஒரு காலகட்டம் இருந்தது. ஆனால், மீண்டும் அத்தகைய சூழ்நிலை தோன்றும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக வாக்குறுதி வழங்கிய எந்த அரசியல்வாதியும் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதிபதியாக பதவிக்கு வந்த பிறகு அதை நிறைவேற்றத் தவறியது மாத்திரமல்ல தங்களது அதிகாரங்களை மேலும் அதிகரிப்பதிலும் அக்கறை காட்டினார்கள். அதனால் மீண்டும் அத்தகைய வாக்குறுதியை வழங்கும் அரசியல்வாதிகளை மக்கள் நம்பப் போவதில்லை என்பதே யதார்த்தம்.

ஆனால், தற்போது ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்திருக்கும் நிலையில் மீண்டும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு பற்றிய பேச்சுக்கள் கிளம்பத் தொடங்கியிருக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவும் தாங்கள் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து பாராளுமன்ற ஆட்சிமுறையை மீண்டும் கொண்டுவரப்போவதாக கடந்தவாரம் தேர்தல் பிரசார மேடைகளில் உறுதியளித்திருக்கிறார்கள்.

தாங்கள் அவ்வாறு வாக்குறுதி அளித்த மறுநாள் தான் பிரேமதாச ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக கூறியதாக சுட்டிக்காட்டிய தேசிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகள், நாட்டின் அரசியல் போக்கை தீர்மானிப்பவர்களாக தாங்களே விளங்குவதாக உரிமை வேறு கோரினார்கள்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தில் இளம் சட்டத்துறை நிபுணர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிரும்பும் வேட்பாளர்களில் எவரும் ஜனாதிபதி பதவிக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரங்களை ஒழிப்பது குறித்து தங்களது நோக்கத்தை அறிவிக்கவில்லை என்று கூறியிருந்தார். நேரகாலத்தோடு தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்திருந்த பிரேமதாசவையும் அநுரா குமாரவையும் நோக்கியதாகவே ஜனாதிபதியின் அந்த கருத்து இருந்தது.

தற்போது அவர்கள் இருவரும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு பற்றிய தங்களது நிலைப்பாட்டை அறிவித்து விட்ட நிலையில் இன்னொரு பிரதான வேட்பாளரான விக்கிரமசிங்க என்ன செயயப்போகிறார் என்ற கேள்வி எழுகிறது.

பிரதான வேட்பாளர்கள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில்' று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்தாலும் கூட அதற்காக மக்கள் இந்த தடவை அவர்களுக்கு வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை, ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கப்போவதாக இரு ஜனாதிபதி தேர்தல்களில் வாக்குறுதி அளித்த எதிரணியின் பொது வேட்பாளர்களை ஆதரித்த போதிலும், உண்மையில் அவர் மானசீகமாக அதை விரும்புகிறவர் அல்ல.

இரு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை முதற்தடவையாக சம்பிரதாய பூர்வமாக தொடக்கிவைத்து அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை நிகழ்த்தியபோது ஜனாதிபதி ஆட்சி முறையின் எதிர்காலம் பற்றிய தனது நிலைப்பாட்டை விக்கிரமசிங்க வெளிப்படுத்தியிருந்தார். அதை மீண்டும் நினைவுபடுத்த வேண்டியது இந்த சந்தர்ப்பத்தில் அவசியமாகிறது.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டுமா இல்லையா என்பது தொடர்பில் கருத்தொருமிப்பைக் காண்பதற்கான பொறுப்பை தான் நியமிக்க உத்தேசித்திருக்கும் மக்கள் சபையிடம் ஒப்படைக்கப்போவதாக அவர் அறிவித்தார். ஆனால், அந்த மக்கள் சபை அமைக்கப்படவில்லை என்பது மாத்திரமல்ல, அதற்கு பிறகு அந்த ஆட்சிமுறை ஒழிப்பு பற்றி பேசுவதையும் பெரும்பாலும் அவர் தவிர்த்துக்கொண்டார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும் என்று விக்கிரமசிங்க உண்மையில் நினைத்திருந்தால், 'அறகலய' மக்கள் கிளர்ச்சிக்கு பின்னராக உடனடிச் சூழ்நிலைகளில் எதிரணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கமுடியும். ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு மக்கள் மத்தியில் பரந்தளவில் ஆதரவு இருந்த அந்த பொருத்தமான சந்தர்ப்பம் வேண்டுமென்றே நழுவ விடப்பட்டது. அந்த ஆட்சிமுறை ஒழிப்பு என்பது தற்போதைய சூழ்நிலையில் முக்கியமான பிரச்சினை அல்ல என்ற அபிப்பிராயத்தை ஜனாதிபதி இப்போது கொண்டிருக்கிறார் என்பதை அவரது சில உரைகள் மூலம் உணரக்கூடியதாக இருந்தது.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டிய தேவை குறித்து பெருவாரியான வாதங்கள் நீணடகாலமாக முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றை இங்கு திரும்பக் கூறவேண்டியதில்லை. ஆனால், எவருக்காவது இதற்கு மேலும் சந்தேகம் இருந்தால் கோட்டாபய ராஜபக்சவின் இரண்டரை வருட கால ஆட்சியும் விக்கிரமசிங்கவின் கடந்த இரு வருடகால ஆட்சியும் அந்த ஆட்சிமுறை இனிமேலும் விட்டுவைக்கப்படக் கூடாது என்பதற்கு மிகவும் தெளிவான பிந்திய சான்றுகள்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மாத்திரமே தனது சாதனையாக மக்கள் முன்னிலையில் கூறி ஜனாதிபதி வாக்கு கேட்கிறார். ஆனால், அவரின் குறுகிய கால ஆட்சியில் ஜனநாயக உரிமைகளுக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும் பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டது குறித்தும் அவர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீதித்துறையுடன் அவர் பதற்றமான ஒரு உறவுமுறையையே கொண்டிருக்கிறார்.

> ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு வழங்குவதில் அரசியல்வாதிகளுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் தேர்தலில் வெற்றிபெற்ற பிறகு வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய நேர்மையுடைய அரசியல் தலைவர் ஒருவரை கண்டுபிடிப்பதே இலங்கை மக்களின் பிரச்சினை

பொருளாதார வளர்ச்சியுடன் மாத்திரம் மக்கள் திருப்திப்படுவார்கள் என்றால் அண்மையில் பங்களாதேஷ் பிரதமர் ஷேய்க் ஹசீனாவுக்கு நாட்டைவிட்டு தப்பியோடி இந்தியாவில் தஞ்சமடைய வேண்டிய கதி நேர்ந்திருக்காது.

சஜித் பிரேமதாசவையும் அநுரா குமாரவையும் பொறுத்தவரை, ஜ ஆட்சிமுறை ஒழிப்பதற்கான பொறுப்பு மக்களின் புதிய ஆணையுடன் தெரிவு செய்யப்படும் அடுத்த பாராளுமன்றத்திற்கே உரியது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள். அண்மைக்காலத்தில் அரசியலமைப்புக்கு சில திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு விக்கிரமசிங்க நிருவாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின்போது அவர்கள் அந்த நிலைப்பாட்டை திரும்பத் திரும்ப வெளிப்படுத்தினார்கள்.

தற்போது அவர்கள் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கப்போவதாக கூறுகிறார்கள். இது ஜனாதிபதிக்கு எதிராக பயன்படுத்தக்கூடிய ஒரு விவகாரம் என்பதும் அவர்களுக்கு தெரியும். அவர்கள் கூறுவதைப் போன்று விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கப்போவதாக வாக்குறுதி அளிக்கும் சாத்தியம் இல்லை என்றே தெரிகிறது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது தொடர்பில் தங்களது நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனங்களில் வெளியிடவேண்டும் என்ற கோரிக்கையை மூன்று மாதங்களுக்கு முன்னர் முன்னாள் பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய முன்வைத்தார். ஆனால், அதை முக்கிய அரசியல்வாதிகளில் எவரும் கவனத்தில் எடுத்ததாக தெரியவில்லை. ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக வாக்குறுதி அளிக்கும் வேட்பாளர்கள் அதை நிறைவேற்றுவதற்கான கால எல்லையையும் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட வேண்டும் என்று ஜெயசூரிய கேட்டிருந்தார்.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பில் மற்றைய அரசியல்வாதிகள் தடுமாறிக்கொண்டிருந்தாலும், அது விடயத்தில் ஜெயசூரிய தொடர்ச்சியாக உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்கிறார். அவர் தற்போது அரசியல்வாதி இல்லை. காலஞ்சென்ற வண. மாதுளுவாவே சோபித தேரர் தலைமையில் இயங்கிய சமூகநீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவராக அவர் இருக்கிறார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்காக கடுமையாக பாடுபட்ட சோபித தேரர் தனது இறுதிநாட்களில் பெரும் கவலைகொண்ட மனிதராகவே உயிரை விட்டார். ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக அவருக்கு வாக்குறுதியளித்த அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றி பெற்று அதிகாரத்துக்கு வந்த பிறகு வாக்குறுதியை காப்பாற்றத் தவறியதே அதற்கு காரணம்.

இது இவ்வாறிருக்க, கடந்தவாரம் கல்விமான்களும் அரசியல் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுமாக 83 முக்கியஸ்தர்களும் எட்டு சிவில் சமூக அமைப்புக்களும் சேர்ந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள்.

அடுத்த பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு ஒரு வருட காலத்திற்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு சகல ஜனாதிபதி வேட்பாளர்களும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டதற்கான நோக்கங்கள் என்று கூறப்பட்டவற்றில் எந்த ஒன்றுமே நிறைவேற்றப்படவில்லை என்பதை அந்த ஆட்சிமுறையுடனான 46 வருடகால அனுபவம் காட்டுகிறது. பொருளாதார அபிவிருத்தியில் ஜனாதிபதி ஆட்சி பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இனநெருக்கடி தீவிரமடைந்ததுடன் எமது அரசியல் முறைமையும் அடிக்கடி நெருக்கடிக்குள்ளாகியது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலில் அதிகரிக்கும் வேட்பாளர்கள்: இது நாட்டிற்கு எப்படி சுமையாக மாறுகிறது?

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருப்பது அங்கு விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதற்குக் காரணம், வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், ஜனாதிபதி தேர்தலுக்கான செலவுகளும் தேவைகளும் ஏறக்குறைய எல்லா வகையிலும் அதிகரித்துள்ளது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அதிகரித்திருப்பது, இலங்கை ஜனாதிபதி தேர்தலை எந்தெந்த வகையில் பாதிக்கும்?

**எவ்வாறு ஜனாதிபதி வேட்பாளராகலாம்?**

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக போட்டியிட இரண்டு வழிகள் உள்ளன. அது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளராக போட்டியிடுவது அல்லது சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவது.


அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்கள் ரூ.50,000 (இலங்கை ரூபாய்) வைப்புத் தொகையாகவும், சுயேச்சை அல்லது பிற அரசியல் கட்சிகளில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்கள் ரூ.75,000 (இலங்கை ரூபாய்) பாதுகாப்பு வைப்புத் தொகையாகவும் செலுத்த வேண்டும்.

நியமிக்கப்பட்ட தேதியில் வைப்புத் தொகையை செலுத்தி தேர்தல் ஆணைக் குழுவிடம் வேட்புமனு தாக்கல் செய்த வேட்பாளர்கள், அதிபர் வேட்பாளர்களாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் படுவார்கள்.

ஆறு ஜனாதிபதி வேட்பாளர்களுடன் 1982 இல் நடந்த முதல் ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு, 1988 ஜனாதிபதி தேர்தலில் மூன்று வேட்பாளர்கள் மட்டுமே போட்டியிட்டனர்.





மிகக் குறைவான வேட்பாளர்களைக் கொண்டு நடத்தப்பட்ட இலங்கை ஜனாதிபதி தேர்தல் அதுதான். அதுவரை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மட்டுமே வேட்பாளர்களை நியமித்திருந்த நிலையில், 1994ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இரண்டு சுயேட்சை வேட்பாளர்கள் களம் இறங்கினர். 1999 மற்றும் 2005 ஜனாதிபதி தேர்தல்களில் 13 வேட்பாளர்கள் இருந்தனர்.

2010ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது. அந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை 22 ஆகும்.

இது 2015இல் 19ஆகக் குறைந்தது, ஆனால் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இம்முறை, 2024 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி தேர்தலில் 40 பேர் வைப்புத் தொகை செலுத்தியிருப்பதுடன் 39 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர். 39 வேட்பு மனுக்களும் தேர்தல் செயலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி இந்த ஆண்டு இலங்கை ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

**இரண்டு அடி நீள வாக்குச்சீட்டு**

அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் (35) 2019 ஆம் ஆண்டு போட்டியிட்ட நிலையில், இலங்கை வரலாற்றில் மிக நீளமான வாக்குச்சீட்டு அந்த ஆண்டு அச்சிடப்பட்டது.

வாக்குச் சீட்டு 24 அங்குலத்துக்கும் அதிகமாக இருந்தது. வாக்காளர்கள் இரண்டு அடி நீளமுள்ள அந்த வாக்குச் சீட்டைப் பயன்படுத்தி வாக்களித்தனர்.

இம்முறை 39 வேட்பாளர்கள் என்பதால் அதை விட நீளமான வாக்குச்சீட்டு தேவைப்படும்.

வாக்குச் சீட்டின் அளவு அதிகரிக்கும் போது, காகிதங்கள் மற்றும் அச்சிடுவதற்கான செலவும் அதிகரிக்கிறது. வேட்பாளர்களின் அதிகரிப்பால் வாக்களிக்கும் செயல்முறையின் சிக்கலான தன்மையும் அதிகரிக்கும்.

2019ஆம் ஆண்டு நடந்தது போல் இம்முறையும் தேர்தல் ஆணைக்குழு கூடுதலான வாக்குப்பெட்டிகளை வழங்க வேண்டும் என்பதால் அதற்கான கூடுதல் செலவையும் தேர்தல் ஆணைக்குழு ஏற்க வேண்டும்.

வாக்குப்பெட்டிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், போக்குவரத்து வசதிகளையும், அவர்களின் பாதுகாப்பிற்காக பணியில் அமர்த்தப்பட்டுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. மேலும் வாக்கு எண்ணிக்கைக்கும் அதிக நேரம் ஆகலாம்.

ஒரு வாக்காளர், வாக்களித்து, மடித்து வாக்குப்பெட்டியில் போடும் நீளமான வாக்குச்சீட்டை, அதிகாரிகள் பிரித்து குறைந்தது மூன்று முறை எண்ண வேண்டும்.

எந்தவொரு வேட்பாளரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறாவிட்டால், இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பத்தேர்வுகளுக்காக அதிகாரிகள் மீண்டும் எண்ண வேண்டும்.

**அதிகரிக்கும் தேர்தல் செலவுகள்**

2015 மற்றும் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல்களுக்காக செலவிடப்பட்ட தொகைகளைக் கருத்தில் கொண்டால், 2015 ஆம் ஆண்டை விட 2019 ஆம் ஆண்டில் தேர்தல் செலவுகள் இரு மடங்காக அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு தேர்தலுக்கு பின்னரும் தேர்தல் ஆணையர் வெளியிடும் அதிகாரபூர்வ அறிக்கையின்படி, 2015 ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தலுக்காக ரூபாய் 270 கோடிகள் (இலங்கை ரூபாய்) செலவிடப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு இது ரூபாய் 456 கோடிகளாக (இலங்கை ரூபாய்) உயர்ந்தது.

2024 ஜனாதிபதி தேர்தலுக்கு ரூபாய் 1000 கோடி (இலங்கை ரூபாய்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக வாக்குச் சீட்டு அச்சடிக்கும் செலவு பல மடங்கு அதிகரித்துள்ளது.

2019 ஜனாதிபதி தேர்தலின் போது பாதுகாப்பிற்காக 72,808 காவலர்கள் மற்றும் காவல்துறையின் சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போதைய பொருளாதார நிலவரப்படி, 2024 தேர்தலில் பாதுகாப்புக்கான செலவுகள் மிகவும் அதிகமாக இருக்கும்.

கடந்த ஆகஸ்ட் 14ஆம் தேதி இலங்கை தேர்தல் ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில், இது தொடர்பாக செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு தலைமை தேர்தல் ஆணையர் சமன் சிறி ரத்நாயக்க பதிலளித்தார்.

"அதிபர் தேர்தலில், உண்மையான கொள்கையை, உண்மையான சித்தாந் தத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் நேர்மையான வேட்பாளர்கள் போட்டி யிடுவது நல்லது." என்று கூறினார்.

"வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, செலவும் அதிகரிக்கிறது. இதற்கான ஒவ்வொரு ரூபாயும் இந்நாட்டு மக்களின் வரிப் பணத்தில் இருந்து எடுக்கப்படுகிறது." என்றும் கூறினார்.

**ஜனாதிபதி வேட்பாளருக்கான சலுகைகள்**

ஜனாதிபதி தேர்தல் சட்டம், 1981ஆம் ஆண்டு 15ஆம் பிரிவின் படி, ஒவ்வொரு ஜனாதிபதி வேட்பாளரும் பல சலுகைகளைக் கொண்டுள்ளனர்.

அந்த சட்டத்தின் 117வது பிரிவின் படி, ஒவ்வொரு ஜனாதிபதி வேட்பாளரும் இலங்கை தொலைக் காட்சி மற்றும் இலங்கை வானொலியில், தங்களது பிரசார நடவடிக்கைகளை இலவசமாக மேற்கொள்ள அனுமதி உண்டு. ஆனால் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள சில வரம்புகளுக்கு உட்பட்டு, ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்திற்கு மட்டுமே அதற்கு உரிமை உண்டு.

அதே சட்டத்தின் 114வது பிரிவின் படி, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு, தபால் துறை ஜெனரலின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, கட்டணம் செலுத்தாமல், தங்கள் தேர்தல் தொடர்பான ஆவணத்தை அனுப்பும் உரிமையும் வேட்பாளர்களுக்கு உண்டு. மேலும், தேர்தல் காலத்தில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதும் வழக்கம்.

இந்தச் சலுகைகள் அனைத்தும் நாட்டு மக்களின் வரிப் பணத்தில் இயங்கும் நிறுவனங்களால் வழங்கப்படுவதால், வேட்பாளர்கள் அதிகரிப்பால் அந்த நிறுவனங்களுக்குச் செலவும் அதிகம்.

மேலும், ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனித்தனியாக வரக்குச்சாவடி முகவர், மண்டல முகவர்களை நியமிக்க வாய்ப்பு உள்ளதால் வாக்குச்சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணும் மையங்களில் நெரிசல் ஏற்பட வாய்ப்புள்ளது.

இது குறித்து பேசிய தனது பெயரை வெளியிட விரும்பாத மூத்த அதிகாரி ஒருவர், வெளிநாடுகளில் தஞ்சம் அடையும் நோக்கில் சிலர் இதனை சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர் என்று கூறினார்.

**வைப்புத் தொகையை உயர்த்துவது தீர்வாகுமா?**

ஜனாதிபதி தேர்தலில் அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிடுவதற்கு வேட்புமனு தாக்கலுக்கான வைப்புத் தொகை குறைவாக இருப்பதே காரணம் என பல தரப்பினரும் கருத்து தெரிவிக்கின்றனர்.

தற்போதைய வைப்புத் தொகை 1981 ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. இலங்கை ரூபாயின் மதிப்பின் வீழ்ச்சி உள்ளிட்ட பல காரணங்களால் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட வைப்புத் தொகை தொடர்பான முடிவு திருத்தப்பட வேண்டுமென கோரிக்கைகள் எழுந்துள்ளன.

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவது நாட்டின் ஜனநாயகத்திலுள்ள நெருக்கடியை வெளிக்காட்டுகிறது என்று சிறி ஜயவர்தனேபுர பல்கலைக்கழகத்தின் சமூக அரசியல் பிரிவின் தலைமை பேராசிரியர் விஷாக சூரியபண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தலுக்கான வைப்புத்தொகையை அதிகரிப்பது, வேட்பாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த பொருத்தமானதாக இருக்கும் என்று அவர் கூறினார்.

"அரசியல் கட்சிகள் கலைக்கப்படுகிறது. ஆளுமைகள் உருவாகிறார்கள். அப்படியென்றால் ஜனநாயகத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. முக்கிய கட்சிகள் இதனை கையாள முழுவதுமாக தவறிவிட்டன. இந்த வேட்பாளர்கள் யாரும் பெரும்பான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை." என்கிறார் அவர்

இந்த நிலைமை ஜனநாயகத்தின் முக்கிய பகுதியான, பெரும்பான்மை மக்களின் ஒப்புதல் பெறுவது குறித்த கேள்வியை எழுப்புகிறது என்று பேராசிரியர் கூறுகிறார்.

"அத்தகைய சூழ்நிலையில், பெரும்பான்மை விருப்பத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு விருப்பம் வெளிப்படுத்தப்படுகிறது." என்கிறார் அவர்

தேர்தல் காலத்தில் சில சலுகைகளுக்காக சிலர் அதிபர் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இப்போதும் கூட வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் முழுவதும் நீக்கப்பட்டு, குறிப்பிட்ட வரம்புகளுக்கு உட்பட்டு வைப்புத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும்." என்கிறார்

இதுபோன்ற கட்டுப்பாடுகள் ஜனநாயகத்தில் சிக்கலை ஏற்படுத்தாதா என்று பேராசிரியையிடம் கேட்டபோது, அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

"ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் போது அவர்கள் நல்ல கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும். பொதுவாக வைப்புத்தொகையை உயர்த்தி, தேவையான வரையறைகள் கொண்டுவரப்பட்டால், தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு தடுக்கப்படாது. ஆனால் தற்போது நடைமுறையில் இருக்கும் முறையினால் ஜனநாயகம் மேலும் நெருக்கடிக்குள் தள்ளப்படும்." என்கிறார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு(ம்)மா சும்மா சொல்பவைகளை கேட்கும் நிலையில் தமிழர் இன்றில்லை!


பனங்காட்டான்

இலங்கையில் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலின் பிரதான நான்கு வேட்பாளர்களும் தங்கள் பரப்புரைகளை ஆரம்பித்துள்ளனர். தேர்தலுக்கு இன்னமும் 27 நாட்கள் இருப்பதால் பரப்புரை வேகங்கொண்டு சூடு பிடிக்க இன்னும் சில நாட்கள் வேண்டும்.

39 வேட்பாளர்களில் ஒருவரான ஐதுரூஸ் இலியாஸ் காலமானதால் வேட்பாளர் எண்ணிக்கை 38 ஆகியிருப்பினும் வாக்காளர் அட்டை சுமார் இரண்டு அடி நீளமானதாக இருக்கும்.

ரணில், சஜித், அநுர குமார, நாமல் ஆகிய நான்கு பிரதான வேட்பாளர்களும் தலா 100 பரப்புரை கூட்டங்களை நடத்த ஏற்பாடாகியுள்ளது. இதன்படி பார்க்கின் நான்கு வாரங்களுள் 400 முக்கிய பரப்புரை கூட்டங்கள் இடம்பெறப்போகின்றன.

இதனை எழுதும்வரை எந்தவொரு வேட்பாளரும் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடவில்லை. ஆனால் அதற்கு முன்னதாக வாய்வேட்டு அறிவிப்புகள் றொக்கட் வேகத்தல்




பறக்க ஆரம்பித்துள்ளது. வழக்கமாக தேர்தல் காலங்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கப் போவதாக வெளிவரும் அறிவிப்பு, சஜித் பிரேமதாசவிடமிருந்து இம்முறை வந்துள்ளது. இவர் ஜனாதிபதியாகத் தெரிவானாலும் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இதற்குத் தேவை என்பதை வாக்காளர்கள் மறந்துவிட்டனர் என நினைக்கிறார் போலும். சகல அரசாங்க ஊழியர்களுக்கும் அடுத்த ஜனவரியில் 24 வீத சம்பள அதிகரிப்பு என்றும் அறிவித்துள்ளார்.

ஜே.வி.பி. வேட்பாளர் அநுர குமார திசநாயக்கவே இதுவரை கூடுதலான உத்தரவாதங்களை அறிவித்தவராவார். வறியவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா நிவாரணம், எரிவாயு மற்றும் மின்சாரக் கட்டணங்கள் குறைப்பு என்பவைகளோடு தமது ஆட்சியில் புதிய அரசியலமைப்பு வருமென்றும் அறிவித்துள்ளார். நல்லாட்சிக் காலத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரிடமிருந்து அடிக்கடி கேட்டு புளித்துப்போன கதை இது.

ரணில் இப்போது ஜனாதிபதியாக இருப்பதால் சில அறிவிப்புகளை தமக்குரிய நிறைவேற்று அதிகாரம் ஊடாக வெளியிட்டு வருகிறார். அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, வசதி குறைவானவர்களுக்கு மானியம் என்பவை இதுவரை இவர் வெளியிட்ட சில அறிவிப்புகள். இதனை தேர்தல் சட்டமீறல் என்று சுட்டியுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், செப்டம்பர் 21க்கு முன்னர் இவைகளை வழங்க முடியாதென தடை விதித்துள்ளார்.

நாமல் ராஜபக்ச தமது முதலாவது பரப்புரைக் கூட்டத்தை அநுராதபுரத் தில் நடத்தினார். மகனின் வெற்றியில் நம்பிக்கையில்லையாயினும் புத்திர பாசம் மகிந்தவை அங்கு உரையாற்ற வைத்தது. அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த பொதுஜன பெரமுனவின் எந்தவொரு எம்.பி.யும் இதில் பங்கு பற்றாதமை இன்றைய பேசுபொருள்.



எக்காரணம் கொண்டும் தங்களால் மாகாண சபைகளுக்கு காணி அதிகார மும், காவல்துறை அதிகாரமும் வழங்க முடியாதென இக்கூட்டத்தில் பகிரங்க மாக அறிவித்த நாமல் ராஜபக்ச, வடக்கு கிழக்கு இணைப்பும் கிடையாது என்று அடித்துக் கூறினார். தம்மை நேர்மை யான உண்மையாளர் என காட்டிக் கொள்வதற்காக இவ்வாறு தெரிவித்தாரெனினும், சிங்கள பௌத்த மக்களுக்கு இதனூடாக ஒரு செய்தியைத் தெரிவிப் பதே இவரது பிரதான நோக்கம்.

காணி அதிகாரம் தரப்படும், ஆனால் காவல்துறை அதிகாரம் கிடையாது என்று ரணில் கூற, காணி மற்றும் காவல் துறை அதிகாரங்கள் தம்மால் வழங்கப்படுமென சஜித் உத்தரவாதம் வழங்க, புதிய அரசியலமைப்பினூடாக தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுமென அநுர குமார தெரிவிக்க, ஒன்றுமே கிடையாது என்று அப்பட்டமாகக் கூறுவதால் கோட்டாபய பெற்றது போன்று பெரும்பான்மை சிங்கள பௌத்த வாக்குகளை அள்ளு கொள்ளை யாக பெறலாமென்பதே நாமலின் இலக்கு.

அடுத்தடுத்த வாரங்களில் இவர்கள் அனைவரும் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடும் பொழுது இன்னும் என் னென்ன விண்ணாணங்களை அவிழ்க்கப் போகிறார்களோ தெரியாது.

சிங்கள தேச நிலைமை இவ்வாறிருக்க தமிழ்த் தேசிய பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரன் (கவனிக்கவும் இவரது பெயர் அரியநேத்திரன் - அரியநேந்திரன் அல்ல) தமது பரப்புரையை தந்தை செல்வா சமாதியில் வணக்கம் செலுத்தி ஆரம்பித்து முள்ளிவாய்க்கால் புனித மண்ணில் முதலாவது கூட்டத்தை நிகழ்த்தியுள்ளார். பொலிகண்டியிலிருந்து பொத்துவில்வரை பரப்புரை கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சிங்கள வேட்பாளர்களை ஆதரித்து ஏமாற்றப்பட்ட காயங்களின் வலியே இம்முறை தமிழ்ப் பொதுவேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதற்கு அடிப்படைக்

> எந்தவொரு வேட்பாளரையும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்க தமிழரசுக் கட்சி இன்னமும் முடிவெடுக்கவில்லை என்று கூறிக்கொண்டு, தமிழ்ப் பொதுவேட்பாளரை தோற்கடிக்க வேண்டுமென சூளுரைப்பதற்கு கட்சி எவருக்காவது அனுமதி வழங்கியதா? இதனை யாரிடம் கேட்பது?

காரணமாக அமைந்தது. இதனைப் புரிந்து கொண்டும் புரியாதது போன்ற நடிப்பில் - ஒரு சிங்கள வேட்பாளரை ஆதரிக்க வேண்டுமென்று, தனிநாடு கேட்ட தமிழரசுக் கட்சியில் இன்னமும் சிலர் இருக்கிறார்கள் என்றால், இவர்களை தமிழ்த் தேசியவாதிகள் என்று எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

சிங்கள வேட்பாளர்கள் தங்கள் பரப்புரையை ஆரம்பித்து விட்ட நிலையிலும், தமிழரின் அரசியல் அபிலாசைகள் தொடர்பாக அவர்களின் நிலைப்பாடு என்ன என்று பகிரங்கமான நிலையிலும், அவர்களில் யாரோ ஒருவருக்கு வழங்கிய ஆதரவு உறுதியை நிலைநாட்டவே இவர்கள் துடிக்கிறார்கள் என்பது நன்றா கத் தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான அரியநேத்திரன் தமிழ்த் தேசியக் கொள்கையின் வழியில் மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்து பொது வேட்பாளராகப் போட்டியிடுகிறார். தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக இதுவரை எந்த முடிவையும் எடுக்க வில்லையெனினும், அதன் மூத்த முக்கிய மானவர்கள் பொதுவேட்பாளரை ஆதரிக்கின்றனர். அரியநேத்திரன் வேட்பாளர் என்பதை அறிவிப்பதற்கு



முன்னரே தமிழரசுக் கட்சியின் தலைவர்களான மாவை சேனாதிராஜாவும், சிவஞானம் சிறீதரனும் கொள்கை ரீதியாக பொது வேட்பாளரை ஆதரித்தவர்கள்.

ஆனால், சுமந்திரனும் சாணக்கியனும் மட்டும் இன்னமும் பொதுவேட்பாளரை எதிர்த்து வருகிறார்கள். அரியநேத்திரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து

கட்சியிலிருந்து அவரை நீக்க வேண்டுமென திட்டமிட்டு செயற்படுகிறார்கள். தமிழரசின் மூத்த துணைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் இவர்களோடு சேர்ந்து இயங்கினாராயினும் தற்போது சற்று தளம்பல் நிலையில் காணப்படுகிறார். இனிமேல் தேர்தல் எதிலும் தாம் நிற்கப் போவதில்லையென இவர் அண்மையில் அறிவித்திருந்ததும் ஞாபகம் இருக்கிறது.

தமது இல்லம் தேடி வந்த அரியநேத்திரனுக்கு மாலை மரியாதை அளித்து தனது வாழ்த்தையும் ஆதரவையும் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார் சிறீதரன் எம்.பி. தமக்கான தேர்தல் சின்னமாக சங்கை சிபார்சு செய்தவரே சிறீதரன்தான் என்று அரியநேத்திரன் இங்கு தெரிவித்ததனூடாக தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவானவரின் பங்களிப்பு இவ்விடயத்தில் பூரணம் பெற்றிருந்தது என்பது தெரியவந்துள்ளது. இது, பொதுவேட்பாளரை எதிர்க்கும் உள்வீட்டுக்காரர்களுக்கு நிச்சயம் ஒரு தலையிடிதான்.

எவரையும் ஆதரிப்பதாக தமிழரசுக் கட்சி இதுவரை முடிவெடுக்கவில்லை யென்றும், தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே முடிவு அறிவிக்கப்படுமென்றும் கூறி வரும் சுமந்திரன், பொது வேட்பாளரை எப்படியாவது தோற்கடிப்பேன் என்று கூறுவதற்கு கட்சி அனுமதி கொடுத்ததா? கட்சியின் முடிவு வெளிவருவதற்கு முன்னர் ஒரு சிங்கள வேட்பாளரை ஆதரிக்கப் போவதன் அறிகுறியாகவே தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்க்கிறார் என்பதை தமிழரசுக் கட்சியினரே அறிந்துள்ளனர்.

தம்முடைய சொற்படிதான் எதுவும்




நடைபெறுமென்ற இறுமாப்பில் தாங்கள் அறிவிக்கும் வேட்பாளருக்கே தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்றும் சுமந்திரன் அறிவித்து வருவதுகூட அவர் ஆதரவளிக்க விரும்பும் சிங்கள வேட்பாளரை நம்ப வைக்கவும், மகிழ்ச்சிப்படுத் தவுமே.

இவ்விடத்தில், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் இருவர் அண்மையில் வெளியிட்ட இரண்டு கருத்துகள் சுமந்திரனுக்கு சமர்ப்பணம்:

- திரு. சீ.வீ.கே.சிவஞானம் - “தமிழரசுக் கட்சி ஆதரவளிக்கும் வேட்பாளர்களை தமிழ் மக்கள் ஆதரிப்பார்களா என்பது கேள்விக்குறி. அவர்கள் சிந்தித்துச் செயற்படத் தயாராகி விட்டனர்.
- அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கலையரசன் - “மக்கள் கருத்துகளோடு சேர்ந்து செயற்பட வேண்டியது இன்றைய அவசியம். சு(ம்)மா சும்மா சொலிக் கொண்டிருப்பதை கண்மூடிக் கொண்டு கேட்டு செயற்படும் நிலையில் தமிழர்கள் இன்று இல்லை. தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களும் அவ்வாறு இல்லை என்பது இப்போது தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான நேரத்தில் அரசியல்வாதிகளுக்கு துப்பாக்கிகளை வழங்க முடிவெடுத்த அரசாங்கம்

பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் இரு றிப்பீட்டர் துப்பாக்கிகளை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம் தேர்தல் நெருங் நிலையில் அவர்களை இலக்கு வைக்கக் கூடிய வன்முறை தீவிரமடையும் என்று ஏற்பட்டிருக்கும் அச்சத்தின் அறிகுறியாகும். அறகலய காலகட்ட வன்முறையை கருத்திற்கொண்டு ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் இரு றிப்பீடடர் துப்பாக்கிகளை வழங்குவதற்கு தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் அவற்றைப் பெறுவதற்கு அவர்கள் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சு பாராளுமன்ற செயலகத்துக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தனிப்பட்ட பாதூகாப்புக்காக பெற்றுக்கொள்வதற்கு உரித்தைக் கொண்ட தன்னியக்க பிஸ் கு மேலதிகமானதாகும். இந்த வசதியின் மூலமாக பெறப்படுகின்ற துப்பாக்கிகளை பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறிய பின்னரும் கூட அவர்கள் அனுமதிப்பத்திரத்தை வருடாந்தம் புதுப்பித்து தொடர்ந்தும் வைத்துக்கொள்ளமுடியும்.

அறகலய காலகட்டத்தில் நிலவியதைப் போன்ற சூழ்நிலை மீண்டும் தோன்றும் என்ற அரசாங்கத்தின் அச்சத்தை கேள்விக்குட்படுத்த வேண்டியது அவசியமாகும். இன்றைய நிலைவரம் இரு வருடங்களுக்கு முன்னர் இருந்தததையும் விட முற்றிலும் வேறுபட்டதாகும். 2019 ஜனாதிபதி தேர்தலிலும் 2020 பாராளுமன்ற தேர்தலிலும் மக்களிடம் இருந்து ஆணை ஒன்னறப் பெற்றுக்கொண்ட அரசாங்கம் அதிகாரத்தில் தொடர்ந்தும் இருப்பதற்கான சட்டபூர்வமான உரிமையைக் கொண்டிருந்த ஒரு பின்புலத்திலேயே 2022 அறகலய போராட்டம் மூண்டது.

மக்களின் அடிப்படைத் தேவை களை நிறைவேற்றுவதற்கு அப்பட்டமாக தவறிய போதிலும் கூட அதிகாரத்தைக் கைவிடுவதற்கான எந்த அறிகுறியையும் அந்த அரசாங்கம் காண்பிக்கவில்லை. அதனால் அத்தகைய ஒரு அரசாங்கத்தை பதவியில் இருந்து நீக்குவதற்கு நெருக்குதலைக் கொடுக்க ஒரேவழியாக மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட வேண்டியிருந்தது. இன்று ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவுக்கு வருவதுடன் மக்கள், புதிய ஒரு ஜனாதிபதியையும் புதிய அரசாங்கத்தையும் தெரிவுசெய்வதற்கு வாக்களிக்கும் உரிமையைக் கொண்டிருக்கிறார்கள்.


2022 அறகலய போராட்டம் அமைதியாகவே தொடங்கியது என்பதை மனதிற்கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். இரசாயன பசளை வகைகள் மீது தடை விதிக்கப்படுவதற்கு வழிவகுத்த அன்றைய அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளுக்கு எதிராக கிராமப் புறங்களில் முதலில் போராட்டங்கள் இடம் பெறத்தொடங்கின. வரவிருக்கும் பொருளாதார அனர்த்தத்தை முன்னுணர்ந்து கொண்ட விவசாயிகள் கிராமப் புறங்களில் வீதிமறியல்களைச் செய்தனர். ஆனால் அதனால் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை

ஆனால், பெட்ரோல், எரிவாயு, உணவு மற்றும் மருந்து வகைகளை கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டு நாணய தட்டுப்பாட்டின் வடிவில் நாட்டின் ஏனைய பாகங்களையும் பொருளாதார நெருக்கடி தாக்கத் தொடங்கி அரை நாளுக்கு மேல் மின்வெட்டும் நீடிக்கப்பட்டபோது நகர்ப்புறங்களுக்கும் போராட்டங்கள் அமைதியான முறையில் என்றாலும் பரவின. போராடடக்காரர்களும் பாதுகாப்பு படைகளும் பெருமளவுக்கு நிதானமாக நடந்து கொண்டது ஒரு முன்னுதாரணமாக அமைந்தது.

**தூண்டப்பட்ட வன்முறை**

மக்கள் எதிர்நோக்கிய பொருளாதார இடர்பாட்டின் விளைவாக அறகலய போராட்டங்கள் பெருமளவுக்கு தன்னியல்பாகவே தீவிரமடைந்தன. இனிமேலும் பதவியில் இருக்க முடியாது என்று அரசாங்கத்துக்கு கூறுவதற்கு சாதாரண குடிமக்கள் நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் தொலைதூர இடங்களில் இருந்தும் தங்கள் சொந்தச் செலவில் வந்தார்கள்.

அரசாங்கம் இரு வருடங்களுக்கு முன்னரேயே தெரிவுசெய்யப்பட்டது என்பதும் சட்டத்தின்படி அதன் பதவிக் காலத்தில் மேலும் மூன்று வருடங்கள் இருந்தன எனபதுமே பிரச்சினையாக இருந்தது. அரசாங்கம் பதவியில் இருந்து இறங்க மறுத்தது. தாங்கள் விரைவில் அதிகாரத்துக்கு வருவதற்கு வாய்ப்பு ஒன்றைக் கண்ட எதிரணி கட்சிகளினால் நிதியுதவி செய்யப்பட்ட கணிசமான பிரிவினரும் போராட்டங்களில் பங்குபற்றினர் என்பதில் சந்தகமில்லை.



இலங்கையின் பாதுகாப்பு படைகள் அரசியல்வாதிகளின் ஆணையின் கீழ் செயற்படுவதே அவற்றின் பலமாகும். அரசியல் ஆசான்கள் தவறான சட்டத்துக்கு புறம்பான உத்தரவுகளைப் பிறப்பிக்கும்போது பாதுகாப்பு படைகள் பிரச்சினையை எதிர்நோக்கவேண்டிவருகிறது.

ஆனால், அரசாங்கம் வன்முறையைப் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கும் வரை போராட்டங்கள் அமைதியாகவே தொடர்ந்து கொண்டிருந்தன என்பது முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய அம்சமாகும். அரசாங்க உறுப்பினர்களின் தலைமையிலான குண்டர்கள் வீதிகளில் இறங்கி போராட்டக்காரர்களுக்கு எதிராக வன்முறையில் இறங்கிய போது வன்முறை தொடங்கியது. அதற்கு பிறகு தீவிரமடைந்த பரவலான வன்முறையை கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கவில்லை. இந்த வன்முறை பாதுகாப்பு படைகள் பாராமுகமாக இருந்த அரசாங்க வன்முறைக்கான எதிர் வினையாகவே இருந்தது.

இலங்கையின் பாதுகாப்பு படைகள் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் தலைவர்களின் ஆணையின் கீழ் எப்போதும் செயற்பட்டு வந்ததே அவற்றின் பலமாகும். அரசியல் ஆசான்கள் சட்ட விரோதமானதும் நெறிமுறைக்கு புறம்பானதுமான உத்தரவுகளைப் பிறப்பிக்கும்போதே பாதுகாப்பு படைகள் பிரச்சினையை எதிர்நோக்கவில்லை. அறகலய போராட்டத்தின் விடயத்தில் அமைதி வழியால் போராடியவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு அரசியல்வாதிகளே தலைமை தாங்கினார்கள்.

இந்த பின்புலத்தில் நோக்கும்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆயுதங்களை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை அறகலய காலகட்டத்துடன் தொடர்புபடுத்துவது தவறாகும். அறகலய போராட்ட காலத்தைப் போலன்றி தற்போது போராட்டத்தில் ஈடுபடுவதற்கு பதிலாக வாக்குகளை பயன்படுத்த க்கூடியதாக இருக்கும் போது அமைதியை விரும்பும் இலங்கை மக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வன்முறையை பயன்படுத்த வேண்டிய தேவை எதுவும் கிடையாது.

தேர்தல் காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்முறை அச்சுறுத்தல் ஏற்படும் என்று அரசாங்கம உணருவதானால் பாதுகாப்பு படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பது போன்ற நடவடிக்கைகளின் மூலமாக அவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்கமுடியும். அதைவிடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு றிப்பீட்டர் துப்பாக்கிகளை வழங்குவது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். அத்த கைய ஆயுதங்களை பயன்படுத்துவதில் பயிற்சிகளைப் பெறாத பாராளுமன்ற உறுப்பினர்களினால் சாதாரண குடிமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும்.

**சட்டபூர்வமான உரிமை**

வன்முறை மூளும் என்ற அரசாங்கத்தின் அச்சம் தவறானது போன்று தெரிகிறது. தற்போதைய தருணம் ஒரு ஜனநாயகத் திருவிழாவுக்கு ஒப்பானதாகும். அது உண்மையில் அவ்வாறுதான் இருக்கவும் வேண்டும். தேர்தல்கள் ஜனநாயகத்தின் ஒரு கொண்டாட்டமேயாகும். பணக்காரரோ அல்லது ஏழைகளோ, கிராமப்புறத்தவரோ அல்லது நகரப்புறத்தவரோ, பெரும்பான்மை இனத்தவரோ அல்லது சிறுபான்மை இனத்தவரோ ஒவ்வொரு குடிமகனும் சமத்துவமானவராகிறார். அவர்கள் ஒவ்வொருவரினதும் கையில் ஒரு வாக்கு இருக்கிறது.

[illegible]வர்களை தெரிவுசெய்வதற்கும் அவர்களைப் பொறுப்புக்கூற



**கலாநிதி ஜெகான் பெரேரா**

வைப்பதற்கும் அதிகாரத்தை அவர்கள் பெறுகிறார்கள். தலைவர்களின் செயற்பாடுகள் மற்றும் எதிரகாலத்துக்கான அவர்களின் வாக்குறுதிகளைப் பொறுத்து அவர்களை அதிகாரத்தில் இருந்து அகற்றுவதற்கு மக்கள் தங்களின் வாககுகளைப் பயன்படுத்த முடியும். இந்த பின்னணியில் , பாராளுமன்ற உறுப்பினர்களை ஆயுதபாணிகளாக்குவதற்கு தீர்மானம் எடுப்பதற்கு அரசாங்கம் தெரிவுசெய்த நேரம் மிகவும் கவலைக்குரியதாகும்.

அறகலய காலகட்டத்தின்போது அதிகாரத்தில் இருப்பதற்கு அரசாங்கம் ஒரு ஜனநாயக ஆணையைக் கொண்டிருந்தது. வெறுமனே இரு வருடங்களுக்கு முன்னர் தான் அந்த அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பொருளாதாரத் தோல்விகளுக்கு மத்தியிலும் கூட அதன் பதவிக்காலம் முடிவடைவதற்கு மேலும் மூன்று வருடங்கள் இருந்தன. அரசாங்கத்தை பதவியில் இருந்து அகற்றுவதற்கு சட்டரீதியான வழிவகை எதுவும் இல்லாத நிலையில் மக்கள் மாற்றத்துக்கு கோரிக்கை விடுத்து வீதிகளில் இறங்கவேண்டியிருந்தது.

ஆனால் இன்று ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடையும் நிலையில் ஒரு மாதகாலத்திற்குள் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று அமைதியான முறையில் மக்களினால் அரசாங்கத்தை மாற்றமுடியும். மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு தெளிவானதும் சட்டரீதியானதுமான பாதையை வழங்கும் ஜனநாயக செயன்முறை ஒன்று இருக்கும் போது வீதிப்போராட்டங்களுக்கோ அல்லது வன்முறைக்கோ எந்த தேவையும் இல்லை. ஒரு ஜனநாயக முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணுவதில் அரசியலமைப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளின் முக்கியத்துவத்தை இது தெளிவாக வெளிக்காட்டுகிறது.

இன்று ஜனாதிபதி தேர்தலை செப்டெம்பர் 21 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் நிலையில் அரசாங்கத்தின் கதியைத் தீர்மானிப்பதற்கு சட்டரீதியான உரிகையை மக்கள் கொண்டிருக்கிறார்கள். தேர்தலுக்கான திகதியை அரசியலமைப்பு நிர்ணயித்திருக்கிறது. அதன் மூலம் மக்களின் விருப்பு மதிக்கப்படுகிறது. தேர்தலின் முடிவுகளைப் பொறுத்து அரசாங்கம் மாறலாம் அல்லது இதே அரசாங்கம் பதவியில் தொடரலாம். இந்த இரண்டில் எது நடந்தாலும் செயன்முறை சட்டத்தின் கட்டமைப்புக்கு உட்பட்டதாகவே முன்னெடுக்கப்படும். அறகலய பாணி போராட்டத்துக்கான தேவை கிடையாது.

அறகலய போராட்டத்துக்கு வழிவகுத்த சூழ்நிலையின் எந்தவொரு சாயலையும் இன்றைய நிலைவரம் கொண்டிருக்கவில்லை. வன்முறையை எதிர்கொள்வதற்கு தயாராகிக்கொணடு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு றிப்பீட்டர் துப்பாக்கிகளை வழங்குவதற்கு பதிலாக, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் சுதந்திரமானதாகவும் நீதியானதாகவும் அமைவதையும் ஜனநாயக கோட்பாடுகளை மதித்துப் போற்றும் வகையில் இடம்பெறுவதையும் அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிரான கருத்துகளும் அவற்றின் பொய்மையும்!

கந்தையா அருந்தவபாலன்



இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த வேண்டுமென்ற முன்மொழிவை சென்ற ஆண்டின் பிற்கூறில் சில அரசியல் தலைவர்களும் குடிசார் அமைப்புகளும் உச்சரித்தபோது இது சாத்தியமற்ற ஒன்றென்ற எதிர்மறையான எண்ணங்களே பெரும்பாலான தலைவர்களிடத்தும் மக்களிடத்தும் காணப்பட்டன. ஆனால் அந்த எண்ணங்களையெல்லாம் தவிடுபொடியாக்கி தென்னிலங்கைத் தலைவர்களையும் ஆச்சரியப்படுத்தும் வகையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் களத்தில் குதித்துள்ளதுடன் அவருக்கான தமிழ் மக்களின் ஆதரவு நாளாந்தம் அதிகரித்துக் கொண்டு செல்வதைக் காணமுடிகிறது. சிதறிப்போய்விட்ட தமிழ்த் தரப்புகளை தேசமாக ஒன்றிணைத்து அவர்களின் தாயகம்,தேசியம், தன்னாட்சி உரிமைகளை உள்ளடக்கிய சமஷ்டிக் கட்டமைப்பை வலியுறுத்துவதுடன் இனப்படுகொலைக்கான நீதி வேண்டியும் 'நமக்காக நாம்' என்ற பொருத்தமான மகுடவாசகத்துடன் பொதுவேட்பாளரின் பயணம் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு நம்பிக்கையை வளர்க்கத் தொடங்கியுள்ளது. ஆனால் தமது சுயநல நோக்கத்துக்காக அதனை எதிர்க்கும் சில தமிழ் அரசியல் தரப்புகள் மட்டும் பொதுவேட்பாளர் மீது தொடர்ந்து கல்லெறிந்த வண்ணம் உள்ளனர். பொது வேட்பாளர் தொடர்பாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பது, அபாண்டமான பொய்களைக் கூறுவது, சூழ்ச்சிக் கோட்பாட்டுக் கருத்துகளைப் புனைவது, துரோகிப்பட்டம் சூட்டுவது என இவர்களின் வசைக்கருத்துகள் நாளாந்தம் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இவர்களால் முன்வைக்கப்படும் கருத்துகளும் குற்றச்சாட்டுகளும் உண்மையானவையா? அவை தொடர்பாக தர்க்கரீதியாக சிந்திப்போமானால் அதற்கான விடை இலகுவில் எமக்குக் கிடைத்துவிடும்.

இவர்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் முக்கியமான ஒன்று பொதுவேட்பாளரின் பின்னால் இந்தியா உள்ளது என்பது. இக்குற்றச்சாட்டை முன்வைப்பதில் தமிழ்த் தேசிய முன்னணி எனப்படும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியினர் முன்னிலை வகிக்கின்றனர். நாய்க்கு எங்கு அடிபட்டாலும் காலொன்றைத் தூக்குவது போல் இக்கட்சியினர் எதற்கெடுத்தாலும் இந்திய எதிர்ப்பை உமிழ்வது வாடிக்கையாகிவிட்டது. இக்குற்றச்சாட்டுக்கு இவர்களிடம் எந்தச் சான்றுகளும் கிடையாது. இது சூழ்ச்சிக் கோட்பாட்டினை மையமாகக் கொண்ட இவர்களின் வெறும் ஊகம் மட்டுமே. இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்று முதலில் உச்சரித்தவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் என்பதால் இவர்கள் அவ்வாறு ஊகித்தார்களோ என்னவோ? சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்தியச் சார்பாளராகக் கருதப்படும் ஒருவர் என்பதுடன் இந்தியாவின் கடந்தகாலச் செயற்பாடுகளும் அவ்வாறான ஊகத்துக்கு வழிவகுத்திருக்கக்கூடும் என்றாலும் அது வெறும் ஊகம் மட்டுமே. அதனை பொதுவெளியில் உண்மைக்கருத்தாக பொறுப்பு வாய்ந்தவர்கள் முன்வைக்கும்போது அதற்கான சான்றுகளையும் முன்வைப்பது அவசியம். தொடக்கம் முதலே இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைத்துவரும் காங்கிரஸ் கட்சியினர் இதுவரை அதற்கான நம்பகமான எந்தச் சான்றுகளையும் முன்வைக்கவில்லை. சான்றுகளற்ற ஒன்றை உண்மையென மக்கள்முன் இவர்கள் வைக்கும்போது, இவர்களுக்கும் சீனாவுக்குமிடையில் ஏற்பட்ட ' டீல்' காரணமாகவே தேர்தலைப் பகிஷ்கரிக்கச் சொல்லுகிறார்கள் என்று சான்றுகளற்றவகையில் இவர்கள்மேல் வைக்கப்படும் குற்றச்சாட்டும் உண்மையானது என இவர்கள் ஏற்கவேண்டி வரும்.

இக்குற்றச்சாட்டை முன்வைப்பவர்களிடம்,"சரி இந்தியா ஏன் பொது வேட்பாளரின் பின் நிற்கவேண்டும்" எனக்கேட்டால் அதற்கான பதிலையும் அவர்கள் ஊகத்தின் அடிப்படையில் முன்வைக்கிறார்கள். "ரணில் ஜனாதிபதியாக வரவேண்டும் என இந்தியா விரும்புகிறது. தமிழ் மக்கள் சஜித்துக்கே

> தமிழ்ப் பொதுவேட்பாளர் மூலம் பிரிந்து நிற்கும் தமிழ்த்தரப்புகளை ஒன்றுபடுத்த முடியுமல்லவா? தமிழ் மக்களிடையே தேசிய உணர்வை மீண்டும் கட்டியெழுப்ப முடியுமல்லவா? எமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான பலத்தை ஜனநாயக வழியில் ஒன்றுதிரட்ட முடியுமல்லவா?

இம்முறை வாக்களிப்பர். அதனால் அவ்வாக்குகளைப் பொதுவேட்பாளர் மூலம் தடுத்து ரணிலை வெற்றிபெறச் செய்வதே இந்தியாவின் நோக்கம்." இதே நோக்கத்துக்காக ரணிலே பொதுவேட்பாளர் பின்னால் நிற்கிறார் என்று இன்னொருவகையில் குற்றஞ் சுமத்துவோரும் உண்டு. இந்தியாவைப் பொறுத்தவரை ரணில், சஜித் இருவரில் எவர் ஜனாதிபதியாக வந்தாலும் அவர்களின் விருப்பத்துக்கேற்ப கையாளும் வல்லமை அதற்கு உள்ளது. ஒப்பீட்டு ரீதியில் ரணிலைவிட சஜித்தையே அவர்களால் இலகுவாகக் கையாள முடியும் என்பது டன் ரணில் இந்தியாவுக்கு ஆதரவானவராகத் தன்னைக் காட்டிக் கொண்டாலும் மேற்குலகு சார்பானவர் என்ற ஐயம் எப்போதும் இந்தியாவிடம் உள்ளது. இதனால்தான் கோதாபய பிரதமராக ரணிலை நியமிக்க முனைந்தபோது இந்தியா அதனை விரும்பியிருக்கவில்லை. ரணில், சஜித் மட்டுமல்ல அநுரகுமார ஜனாதிபதியாக வந்தாலும் அவர்களின் பதவிக்காலத்தில் இந்தியா, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றை பகைக்காது ஆட்சி செய்யவேண்டியிருக்கும் என்பதே யதார்த்தம். இவ்வாறானதொரு வாய்ப்பு காணப்படும்போது பொதுவேட்பாளரின் பின் ஏன் இந்தியா நிற்கவேண்டும்? இதற்கு மேலாக இந்தியத் தூதுவருடனான தமிழ்த் தலைவர்களின் சந்திப்புகளின்போதுகூட பொதுவேட்பாளரை ஊக்கப்படுத்தும் கருத்துகளை அவர் முன்வைத்ததாகச் செய்திகளில்லை. தென்னிலங்கை வேட்பாளர்களுடன் கலந்துரையாடுவதற்கே பெரிதும் ஊக்கப்படுத்தப்பட்டது. இவ்வாறான ஒரு சந்திப்பில் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்கள் கூறுவது போன்று தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு இந்தியா சார்பானது, ரணிலை வெல்ல வைப்பதே இந்தியாவின் நோக்கம் என்றால் அதற்கு ஏன் பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டும்? நேரடியாகவே அவர்களிடம் ரணிலுக்கு தமிழ் மக்களை வாக்களிக்கச் செய்யும் காரியங்களைச் செய்யுமாறு பணித்திருக்கலாமே. மேலும் அவர்கள் கூறுவது போல இந்தேர்தல் தமிழர்களுக்கானது அல்ல பெரும்பான்மைச் சிங்களவர்க்கானது அதில் தமிழர்கள் பங்கெடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் ரணிலோ, சஜித்தோ, அநுரவோ யார் வந்தாலும் நமக்கென்ன? அதைப்பற்றி அக்கறைப்பட வேண்டிய அவசியமில்லையே. உண்மையில் ஒருவர் ஜனாதிபதியாக வரவேண்டும் என்று வாக்களிப்பதைப் போலவே இன்னொருவர் வரக்கூடாது என்று அத்தேர்தலைப் புறக்கணிப்பதும் தேர்தலில் பங்குகொள்வதற்குச் சமமானது அல்லவா. அதாவது மறைமுகமாக நாம் விரும்பும் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு வழிவகுப்பதாகும். 2005 இல் ஜனாதிபதித் தேர்தலைத் புறக்கணித்ததன் நோக்கம் ரணில் வரக்கூடாது என்பது மட்டுமல்ல மஹிந்த வரவேண்டும் என்பதையும் உள்ளடக்கியது என்பது அறியாத விடயமல்ல. அவ்வாறு பார்த்தால் தேர்தலைப் புறக்கணிக்கச் சொல்பவர்கள் வேறு ஒருவர் ஜனாதிபதியாக வரவேண்டும் என்று விரும்புகிறார்கள் என்றும் கருதமுடியுமல்லவா? இவை எல்லாவற்றையும் விட்டுவிடுவோம். ஆனால் தமிழ்ப் பொதுவேட்பாளர் மூலம் பிரிந்து நிற்கும் தமிழ்த்தரப்புகளை ஒன்றுபடுத்த முடியுமல்லவா? தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதற்கு வாய்ப்பு உருவாகிறது அல்லவா? தமிழ் மக்களிடையே தேசிய உணர்வை மீண்டும் கட்டியெழுப்ப முடியுமல்லவா? எமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான பலத்தை ஜனநாயக வழியில் ஒன்றுதிரட்ட முடியுமல்லவா? யார் குற்றினாலும் அரிசிதானே எமக்கு வேண்டும்.

இதன்பின்னால் உள்ள இன்னொரு ஊகம் தமிழ் மக்கள் சஜித்துக்கே வாக்களிப்பர் என்பது. இம்முறை தமிழராகச் சிந்திக்காது இலங்கையராக மட்டும் சிந்திப்போர் மட்டுமே தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்க விரும்புவர். அவ்வாறு விரும்புவர்களில் சஜித்துக்கா? ரணிலுக்கா? வாக்களிக்க விரும்புகிறீர்கள் எனக்கருத்துக்கணிப்பொன்றை மேற்கொண்டால் பெரும்பாலானவர்கள் ரணிலுக்கே தமது ஆதரவைத் தெரிவிப்பர். ஏனெனில் இருவருமே தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைத் தரப்போவதில்லை. அதற்கப்பால் இவ்விருவரில் ஒப்பீட்டு ரீதியில் ஆளுமை கூடிய தலைவராக ரணில் கருதப்படுவதுடன் இக்கட்டான நிலையிலிருந்து நாட்டைக் காத்தவர், இனியும் அதனை முன்கொண்டு செல்வார் என்ற நம்பிக்கை மக்களிடத்தே காணப்படுவதால் ஆகும். இதற்குமேலாக இன்னுஞ் சிலர் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒருசில தீர்வு தருவதென்றாலும் அது ரணிலால் மட்டுமே சாத்தியமாகும் என நம்புவர்களும் உள்ளனர். இவற்றுக்கு மேலாக ஒப்பீட்டு ரீதியில் ரணிலுக்கு அதிகளவான தமிழ் வாக்குகளைப் பெற்றுக் கொடுக்க டக்ளஸ்,அங்கஜன், விஜயகலா அணி உள்ளது. சென்ற முறை சஜித்துக்கு தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் அவருக்கான ஆதரவால் விழுந்தவை அல்ல. உண்மையில் அவை மகிந்த - கோத்தாபய கொம்பனிக்கு எதிராக விழுந்த வாக்குகள் மட்டுமே. அதனை வைத்து இம்முறையும் அதேபோல் தமிழ் மக்கள் சஜித்துக்கே வாக்களிப்பர் என எண்ணுவது தவறான பார்வையாகவே அமையும். அதேபோல தமிழ்த் தலைவர்கள் சுட்டிக்காட்டும் சிங்களத் தலைவர்களுக்கு இனியும் மக்கள் வாக்குப் போடுவார்கள் என்று எண்ணுவதும் தவறான பார்வையாகவே அமையும். இவ்வாறான ஒரு அரசியல் பின்புலம் காணப்படும் நிலையில் ரணிலை வெல்ல வைப்பதற்காகப் பொதுவேட்பாளரின் பின்னால் இந்தியா நிற்கிறது அல்லது ரணில் நிற்கிறார் என்றும் பணப்பெட்டிகள் கைமாறிவிட்டன என்றும் தொடர்ந்து புரளியைக் கிளப்பினால் அதை மக்கள் நம்புவார்களா?

இவர்கள் முன்வைக்கும் மற்றொரு குற்றச்சாட்டு தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் இணைந்துள்ள அரசியல் கட்சித்தலைவர்கள் பற்றியது. இத்தலைவர்கள் அரசு சார்பான ஒட்டுக்குழுக்கள். இவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்லர் என்பது. இதனை நிறுவுவதற்கு இத்தலைவர்களின் கடந்த காலச் செயற்பாடுகள் பலவற்றைச் சான்றாகக் காட்டுவர். அதில் உண்மையில்லாமலில்லை. ஆனால் அரசியலில் நிரந்தர நண்பர்களுமில்லை. நிரந்தர எதிரிகளுமில்லை என்பது அடிப்படை அரசியல் வாய்ப்பாடுகளுள் ஒன்று. அது மட்டுமன்றி அரசியல்வாதிகள் யாரும் கறைபடியாதவர்களுமல்லர். சிங்கள மக்களின் நன்மைக்காகப் பேயுடன் கூட்டுச் சேரத் தயார் என்று கிழட்டுநரி ஜே.ஆர் கூறியதுபோல தமிழ் மக்களின் நன்மைக்காக யாருடனும் கூட்டுச் சேர்வதில் தவறில்லை. இதற்குத் தமிழ் மக்களால் போற்றப்படும் தலைவர் பிரபாகரன் சிறந்த உதாரணம். தமக்கு எதிராகச் செயற்பட்டு, தமது போராளிகளையும் ஆதரவாளர்களையும் கொன்ற எதிரான இயக்கத் தலைவர்களையும் ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கட்சியை வெற்றிகரமாக வழிநடத்தினார். அவரைப்போலவே அத்தலைவர்களும்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் மடல்:

## பொதுவேட்பாளருக்கு எதிரான பரப்புரையும் தமிழர் ஒற்றுமைக்கு செய்யும் துரோகம்தான்!

தங்கள் (23 ஓகஸ்ட், 2024) ஈழநாடு பத்திரிகையின் எது துரோகம்? என்னும் ஆசிரியர் தலையங்கம் வாசித்தேன். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ் தேசிய முன்னணி) கட்சியின் பா. உ செல்வராசா கஜேந்திரன் அவர்கள், தமிழ் பொது வேட்பாளர் திரு பா. அரியநேந்திரன் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டு, ஐம்பதினாயிரம் மாவீரர்களுக்கும், உயிரிழந்த பொது மக்களுக்கும் செய்யும் துரோகமாகும் என்று பேசியதை, எடுத்தியம்பி, "தான் செய்தால் குற்றமில்லை, மற்றவன் செய்தால்தான் குற்றம்" என்பது போல், தானும் ஒற்றயாட்சியை ஏற்றுக் கொண்டு ஆறாவது திருத்தச் சட்டமூலத்துக்கு தலை வணங்கி, ஒப்பமிட்டு பாராளுமன்றம் சென்றதும் துரோகம் தானே? என்று பதிவிட்டிருந்தமை வரவேற்கக் கூடியதே.

இன்று எத்தனை தமிழ் கட்சிகள் தமிழர் பிரதேசங்களில் வலம் வருகின்றன? எல்லாமே, நம்பி வாக்களித்த தமிழ் மக்களுக்கு, ஏதோ ஒரு வகையில் துரோகம் இழைத்த கட்சிகளே, வியாபாரிகள் "இலவசம்" என்கின்ற வார்த்தையை விழம்பரப் படுத்தி நுகர்வோரை ஏமாற்றுவது போல், இன்றைய தமிழ் அரசியல் கட்சிகளும், தாங்கள் ஏதோ தூய தியாகிகள் என்ற நினைப்பில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைப் பார்த்து, துரோகிகள் என்று கதையளப்பது நகைப்பிற்குரியதாயிற்று.

புலிகள் அமரர் சம்பந்தன்ஐயா தலைமையில் தமிழ் கூட்டமைப்பை உருவாக்கி, அதில் வெற்றி பெற்ற அனைவரையும் பாராளுமன்றம் அனுப்பிய போது, ஆறாவது திருத்தச் சட்டமான ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டு போக அனுமதித்ததை மறந்து விட்டாரா? அல்லது, அதையும் துரோகப் பட்டியலில் சேர்க்கப் போகிறாரா?

போராட்டம் நடைபெற்ற அந்த நாட்களிலே, கொழும்பிலிருந்து உல்லாசமாக, ரூபவாகினியில் லங்காபுவத்தின் செய்திகளை கேட்டும், பார்த்தும் உண்மையென்று நம்பியிருந்தவர்களுக்கும், தவளும் குழந்தைகளாய் இருந்தவர்களுக்கும், எங்கே? விழங்கப் போகிறது, " தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" என்னும் வார்த்தைகளில் புதைந்து கிடக்கும், வீரமும், தியாகமும்.

ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் வாழ்ந்து கொண்டு தான் இருப்பார்கள் என்பதை மாற்றி, இனிமேலாவது தெற்கின் தலைமைகளுக்கு, தன்மானத் தமிழ் மக்கள், ஏமாறாதிருப்பவர்களாக இருக்கட்டும் என்பதின் விழைவே "தமிழ் பொது வேட்பாளர்" என்றும், அவருக்கு எதிராக செய்யும் ஒவ்வொரு பரப்புரையும், தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு செய்யும் " துரோகம்" என்பதையும் அழுத்தமாக பதிவிட விரும்புகிறேன்.

**- கே. அருண்**
(மொன்றியால், கனடா)

## ஒரு செய்தி சொல்லுவோம்..!

என்றோ பிறந்திருக்க
எதிர்பார்த்த தமிழ் மழலை
இன்றேனும் பிறந்ததென
இதயத்தில் கொள்ளுவோம்..!

கள்ளிப்பால் கருவினிலே
கொடுத்தேனும் கரைத்திடவே
கொடியவர் முனைகையிலே
விடிவுக்கு முடிவெடுப்போம்!

'ஒன்றுபடா இனம்' என்று
வென்று சிரித்தவர்கள்
அதிர்ச்சியால் அழைக்கிறார்
அடிக்கடி வருகின்றார்!

கள்ளிப்பால் கருவினிலே
கொடுத்தேனும் கரைத்திடவே
கோடரிக் காம்புகளை
கோடி தந்து விடுக்கிறார்!

ஓரணியாய் திரண்டே
ஒரு செய்தி சொல்லுவோம்!
'ஒற்றுமையே முதல் வெற்றி'
ஒற்றருக்கும் ஓதுவோம்!

'தமிழ்ப் பொது வேட்பாளர்'
தங்கத் தமிழ் மழலையாம்!
'அரிய'சங்கு அமுதமென்று
அரவணைத்து வெல்லுவோம்..!!

**- இரா.ஜெயக்குமார்.**



# வியுக்தியார் பதில்கள்

உங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**எம். அகிலேஸ்வரன்
சித்தன்கேணி.**

**கேள்வி:** 2023ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிற்போடப்பட்டதன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகளை தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட தேர்தல் ஆணைக் குழுவின் அதிகாரிகளும் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியும் மீறியுள்ளனர்

என்று உயர்நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பளித்துள்ளதுடன், விரைவாக தேர்தலை நடாத்தவேண்டும் என்றும் உத்தரவிட்டிருப்பது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?.

**வியுக்தியார்:** ஏற்கனவே இந்தப் பகுதியில் ஒரு கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதும் அதுபற்றி குறிப்பிட்டிருந்தேன். ஏற்கனவே பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பாக உயர்நீதிமன்றம் விடுத்த உத்தவை ஜனாதிபதி கண்டுகொள்ளவில்லை. இப்போதும் அவர் மீது கைகளை நீட்டி உயர்நீதிமன்றம் மற்றுமொரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. அதுவல்ல எமக்கு உறுத்துவது, 2023ல் நடைபெறவிருந்த தேர்தலை நடாத்தவேண்டும் என்றே உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது. அப்படியெனில் ஏற்கனவே நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தவர்களே தேர்தலில் போட்டியிடப்போகின்றார்கள். அதாவது பொதுஜன பெரமுனவில் போட்டியிட வேட்புமனுதாக்கல் செய்தவர்கள் இப்போது ஐக்கிய தேசியக்கட்சியிலோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியிலோ இருப்பார்கள். ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்புமனுதாக்கல்செய்த வர்கள் இப்போது ரணிலுடன் இருப்பார்கள். இவர்கள் எல்லாம் எப்படி தேர்தலை சந்திக்கப்போகின்றார்கள் என்பதுதான் இப்போது பிரச்சினையே.

---

**சபா. சிவநாதன்,
குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** இலங்கை இராணுவம் தன்வசம் வைத்திருக்கும் காணிகளை விடுவிப்பதுடன் புதிதாக காணிகளை கைவசப்படுத்துதலை நிறுத்தவேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளாரே.

**வியுக்தியார்:** அட நீங்கள்வேறு. ஏற்கனவே எங்கள் உயர்நீதிமன்றம் விடுக்கின்ற உத்தரவுகளையே கண்டுகொள்ளாத அரசு, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் வேண்டுகோளையா கண்டுகொள்ளப் போகின்றது.

---

**எம். கௌதம்,
அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** தேர்தல் காலத்தில் வடக்கில் உள்ளவர்களை ஏமாற்றவேண்டிய தேவை கிடையாது. தமிழர்களின் கலாசாரத்தை பாதுகாப்பேன். மொழி உரிமையும் வழங்குவேன். ஆனால்,

வட - கிழக்கு மாகாணத்தை இணைத்து காணி, பொலிஸ் அதிகாரத்தை ஒருபோதும் வழங்கமாட்டேன் என்று பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** தான்னால் செய்யமுடியாததை துணிச்சலுடன் சொல்கிறார். அவர் சொல்வதைத்தான் மற்றவர்களும் சொல்கிறார்கள். ஆனால் அதனை இவர் போல சொல்வதில்லை. அரசியலமைப்பில் இருக்கும் பதின்மூன்றை நிறைவேற்றவேன் என்கிறார்கள் சஜித்தும், அனுரவும். ஆனால் காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரத்தையும் சேர்த்தா சொல்கிறீர்கள் என்றால், மௌனமாகிவிடுகின்றனர். ஆனால் இவரோ அப்படியில்லாமல் தான் செய்யப்போவதில்லை என்று துணிச்சலுடன் கூறுகின்றார். அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை, இவரும் மற்றவர்களைப்போல சொன்னாலும் தமிழ் மக்கள் வாக்களிக்கப்போவதில்லை என்பது அவருக்கு தெரிந்ததால்தான் அப்படி சொல்கிறாரோ தெரியவில்லை.

---

**கந்தையா முகுந்தன்
சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** தேசிய இனப்பிரச்னைக்கு அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் போதுமான தீர்வாக அமையாது. தமிழ் மக்களுக்கு தம்மைத் தாமே ஆளக்கூடிய சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு அவசியம் என்று ஐக்கிய சோசலிசக் கட்சியின்~~-ஜனாதிபதி-வேட்பாளர்-சிறிதுங்க~~ ஜயசூரிய தெரிவித்துள்ளாரே. தமிழர்களின் உண்மையான பிரச்சினையை தெரிந்துகொண்ட அரசியல்வாதிகள் சிங்கள மக்கள் சக்தியிலும் இருக்கிறார்களா?

**வியுக்தியார்:** சரியாக கேட்டீர்கள், தமிழர் பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வுதான் சரியானது என்று கூறுகின்ற சிங்கள புத்திஜீவிகள் பலர் இன்றும் இருக்கின்றனர். ஆனால் இவர் அவ்வாறு கூறியதை படித்தபோது, வேட்பாளர்களில் எவராவது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி கட்டமைப்பை தீர்வாக தருவதாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடுபவர்களுக்கே தமது ஆதரவை வழங்கப்போவ தாக நமது தமிழ் அரசு கட்சி ஏற்கனவே அறிவித்திருக்கின்றது. அவர்களுக்கு தெற்கு வேட்பாளர் ஒருவரை ஆதரிக்க இப்போது ஆள் கிடைத்திருக்கின்றது என்று நினைக்கின்றேன்.

---

**இரா. ஜெயருபன்,
பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையை மாற்றி நாட்டைக் கட்டியெழுப்ப புதிய திட்டம் அமுல் படுத்தப்படும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளாரே. ஜனாதிபதி வேட்பாளர்களிலேயே அவர் ஒருவர் தான் புதிதாக இந்த நாட்டுக்கு செய்யப்போவதாக சொல்கிறார் போலத் தெரிகின்றதே.

**வியுக்தியார்:** உண்மைதான். மற்றையவர்கள் எல்லாம் தாங்கள் எதைச் செய்யப்போகின்றோம் என்று சொல்கிறார்கள். ஆனால் இவர் ஒருவர்தான் புதிதாக எதையோ செய்வதாகச் சொல்கிறார். அவரிடம் புதிய திட்டம் என்ன என்று கேட்டாலும், தோழர் அதனையும் வெளியே சொல்கிறார் இல்லையே. சிலவேளை தனது திட்டம் என்ன என்று சொல்லிவிட்டால், மற்றைவர்களும் தனது திட்டத்தை 'கொப்பி" அடித்துவிடுவார்கள் என்று நினைக்கின்றாரோ தெரியவில்லை.

---

**எஸ். செந்துஜன், ராசவீதி,
கோப்பாய்.**

**கேள்வி:** ரிஷாத் பதியுதீன் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்து கொண்டமையால் அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியை இரத்து செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்

திருக்கிறது. அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற பாராளுமன்ற உறுப்பினர்

ஒருவருக்கு 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பணத்தை ஜனாதிபதி

தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி வருகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** நமது சாணக்கியனுக்கு 600 மில்லியன் ரூபா வழங்கப்பட்டதே. அவர் இன்னமும் ரணிலுக்கு ஆதரவு வழங்கவில்லை. ஆனாலும் நிதி ரத்துச் செய்யப்படவில்லை. ஆனால் ரிஷாத்துக்கு மட்டும் நிறுத்தப்பட்டது என்றால், அதன் அர்த்தம் புரிந்துகொள்ளக்கூடியதுதான். இவர் அணிமாறுவேன் என்று உறுதியளித்துத்தான் நிதியைப் பெற்றிருப்பாரோ தெரியவில்லையே. இல்லையெனில் இவருக்கு மட்டும் எதற்கு ரத்துச் செய்யவேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸ் பங்குபெறாத சமாதான பேச்சுவார்த்தை: அமெரிக்கா, கட்டார், எகிப்து ஏன் மும்முரம்?



ஐங்கரன் விக்கினேஸ்வரா

இஸ்ரேல்- ஹமாஸ் இடையேயான போர் காரணமாக காசாவில் பாலஸ்தீனர்களின் உயிரிழப்பு 40,000க்கும் மேல் அதிகரித்த நிலையில் இரு தரப்பினர் இடையே சண்டை நிறுத்த பேச்சுவார்த்தை மேற்கொள்ளும் நடவடிக்கையில் அமெரிக்கா, கட்டார், எகிப்து ஆகிய நாடுகள் தொடர்ந்து முயன்றுள்ளன.

இருதரப்பினர் இடையே சண்டை நிறுத்தம் ஏற்பட்டால் காசாவில் அமைதி நிலவும் என்றும், ஈரான் மற்றும் லெப னானின் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ் ரேல் மீது பதில் தாக்குதல் நடத்துவது தவிர்க்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இஸ்ரேலின் பிணைக் கைதிகளை ஹமாஸ் விடுவிக்கும் வாய்ப்புகளும் ஏற்படும் எனவும் கருதப்படுகிறது.

### சண்டை நிறுத்த பேச்சுவார்த்தை

ஈரானில் இஸ்மாயில் ஹனியே படுகொலையின் பின்னர், இஸ்ரேல் - ஹமாஸ் இடையே சண்டை நிறுத்த பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா, கட்டார், எகிப்து ஆகிய நாடுகள் முயன்றுள்ளன. ஆனால், ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை காரணமாக இந்த பேச்சுவார்த்தை முயற்சி தடைபட்டது.

ஆயினும் கத்தாரில் இஸ்ரேல் அரசவை குழுவினரை சந்தித்து பேசும் முயற்சியில் அமெரிக்கா, கத்தார் மற்றும் எகிப்து பிரதிநிதிகள் ஈடுபட்டனர்.

இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்பது குறித்து ஹமாஸ் அமைப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. இஸ்ரேல் புதிய கோரிக்கைகளை முன்வைப்பதாக ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

நீண்ட காலமாக இஸ்ரேல்- ஹமாஸ் இடையில் போர் நிறுத்தத்திற்கு அமெரிக்கா, எகிப்து, கட்டார் நாடுகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. ஆனால் இந்த முயற்சிக்கு பலன் கிடைக்காமல் உள்ளது. காசா மக்களை பாதுகாப்பதற் கும், பிணைக்கைதிகளை மீட்பதற்கும் போர் நிறுத்தம் அவசியம் என இந்த மூன்று நாடுகள் கருதுகின்றன.

### அமெரிக்க போர் நிறுத்த பரிந்துரை

அமெரிக்கா போர் நிறுத்தத்திற்கான பரிந்துரையை தயார் செய்தது. இந்த பரிந்துரைகளை இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினர் ஏற்றுக் கொள்ளும் வகையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கடந்த வாரம் அக்டோபர் 19இல் அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

> காசாப் போரின் பின்னர், ஒன்பதாவது முறையாக மத்திய கிழக்கிற்கு பயணம் மேற்கொண்ட நிலையிலும், பேச்சுவார்த்தை இறுதியில் போர் நிறுத்தத்தை உறுதி செய்ய முடியாமல் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் நாடு திரும்பினார்

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் சென்ற அவர், இஸ்ரேல் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த பேச்சுவார்த்தை முடிவின் இஸ்ரேல் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டது.

அதன்பின் மத்தியஸ்தராக விளங்கும் எகிப்து, கட்டார் நாட்டு அதிகாரிகளை சந்தித்து பேசினார். அதேவேளையில் ஹமாஸ் அமைப்பினர் அமெரிக்காவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்துள்ளது. இதனால் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்படாமல் உள்ளது.

போர் நிறுத்தம் தொடர்பாக ஆண்டனி பிளிங்கன் கூறுகையில் எங்களுடைய செய்தி மிகவும் எளிமையானது. அது தெளிவானது. மிகவும் அவசரமானது. எங்களுக்கு தேவை போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். தற்போது தான் இது எங்களுக்கு தேவை. நேரம் மிகவும் முக்கியமானது என்றார்.

### ஹமாஸின் குற்றச்சாட்டு

நாங்கள் ஏற்றுக் கொண்ட முந்தைய பரிந்துரைகள் மாற்றப்பட்டுள்ளன. இஸ்ரேலின் புதிய நிபந்தனைகளுக்கு அமெரிக்கா இணங்குகிறது என ஹமாஸ் குற்றம்சாட்டியுள்ளது. ஆனால் ஹமாஸின் குற்றச்சாட்டுக்கு அமெரிக்கா பதில் அளிக்கவில்லை.

இவ்வருட மார்ச் மாத இறுதியில் காசாவில் தற்காலிக போர் நிறுத்தம் கொண்டுவரப்பட்டது. ஆனால் இந்த தற்காலிக போர் நிறுத்தமும் ஏப்ரல் தொடக்கத்திலேயே முடிவுக்கு வந்தது. இதனையடுத்து காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் மீண்டும் நிகழ்த்தி வருகிறது.


வான்வழி, தரைவழி தாக்குதல்களை இஸ்ரேல் மேற்கொண்டு வருகிறது. இதனால் மீண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்து வருகின்றனர்.

இதனிடையே காசாவில் போர்நிறுத்தம் கொண்டுவர கடந்த வாரம் கட்டாரில் அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ஆனால் உடன்பாடு எட்டப்படாமல் அந்த பேச்சுவார்த்தை பாதியிலேயே முடிவுற்றது. இந்நிலையில் போர்நிறுத்தம் தொடர்பாக மீண்டும் இந்த வாரம் பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது. காசாவில் நடைபெறும் போர் மத்திய கிழக்குப் பகுதிகளின் பிற பகுதிகளுக்கும் விரிவடையும் பேராபத்து அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே போர்நிறுத்தத்தை மேற்கொள்ளும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக முனைப்பு காட்டியது.

காசா போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான தருணம் இதுவரை இல்லாத அளவுக்கு மிக நெருக்கத்தில் உள்ளதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அதன் ஒரு பகுதியாக, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் 9-ஆவது முறையாக மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்.

ஆகஸ்ட் 19இல் இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் நகரில், அந்நாட்டின் அதிபர் ஐசாக் ஹர்ஸோக் உடன் அவர் பேச்சுவர்த்தையில் ஈடுபட்டார். அப்போது, காசாவில் போர் நிறுத்தம் ஏற்பட இதுவே கடைசி வாய்ப்பு என்ற எச்சரிக் கையை இஸ்ரேலுக்கும், ஹமாஸுக்கும் அமெரிக்க தரப்பில் விடுக்கப்பட்டுள்ளது.



பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டவர்களை தாயகம் அழைத்து வரவும், போர்நிறுத்தம் ஏற்படுத்திடவும், அமைதியும் பாதுகாப்பும் நிலைத்திடும் வகையில் ஒவ்வொருவரையும் சிறந்த பாதையில் நிலைநிறுத்திடவும் இதுவே ஒரு மிகச்சிறந்த தருணம் என்று ஆண்டனி பிளிங்கன் பேசியுள் ளார்.

ஆயினும் பேச்சு வார்த்தை இறுதியில் போர் நிறுத்தத்தை உறுதி செய்ய முடியாமல் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் நாடு திரும்பினார்.

காசாப் போரின் பின்னர், ஒன்பதாவது முறையாக மத்திய கிழக்கிற்கு பயணம் மேற்கொண்ட நிலையிலும் வெற்றிபெற முடியாமல் தோல்வியுடன் ஆண்டனி பிளிங்கன் நாடு திரும்பியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்புகளுக்கு 15 வீதவட்டியுடன் ரூ. 5000 கொடுப்பனவு

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கண்டி, ஓக. 25

அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பளம் வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்கு பூரண அதிகாரத்துடன் கூடிய ஆணைக்குழு ஒன்று நிறுவப்படும். அரச ஊழியர்களின் சம்பளத்தை 24 சதவீதமாக அதிகரிப்பதோடு அரச ஊழியர்களுக்கான வரியை குறைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்பு கணக்குகளுக்கு இதற்கு முன்பு வழங்கப்பட்டதை போன்று 15 வீத வட்டியை சேமிப்பு வட்டி வீதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 15 வீத வட்டியுடன் கூடிய இலட்சக்கணக்கான ஓய்வூதியதாரர்களின் உரிமை இன்று பறிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியதாரர்கள் ஏமாற்றப்பட்டாலும் தாம் அவர்களை ஏமாற்றப் போவதில்லை. 2016 ஆம் ஆண்டுக்கு முன்பு ஓய்வு பெற்ற அனைவருக்கும் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தை முன்னெடுப்போம் என்றும் சஜித் கூறினார்.

2016 - 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு இந்த சலுகையை கோட்டாபய ராஜபக்ஷ இல்லாமல் ஆக்கியுள்ளார். அதனை மீண்டும் வழங்குவோம். ஓய்வு பெற்றவர்களின் சலுகைகளை உயர்ந்த தரத்தில் பேணும் பொருட்டு, 1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க சட்டத்தைத் திருத்துவதன் மூலம் புதியதொரு சட்ட மூலமொன்று கொண்டு வரப்படும். சிரேஷ்ட பிரஜைகளுக்காக வழங்கப்படுகின்ற 3000 ரூபாய் கொடுப்பனவை 5000 ரூபாயாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த 12ஆவது மக்கள் பேரணி சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்றுக் காலை கண்டி திகன பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சஜித் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச வங்கிகளில் கடன் பெற்றுக் கொண்டு அதனை திருப்பிச் செலுத்தாத செல்வந்தர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் சரியான முறையில் வரியைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் அர்ப்பணிப்புடன் செயல்படுகின்ற போது சமூகத்தில் உள்ள செல்வந்தர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அரச நிதியல் கொள்கையின் மூலம் தேவையான பணத்தை ஈட்டிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தற்போது வறுமை அதிகரித்து மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வரிக்கு மேல் வரிவிதித்து வரையறையற்ற விதத்தில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்கத்தின் ஏமாற்றுக்களுக்கு ஏமாறாமல் ஐ. எம். எவ். உடன் செயல்பட்டு மக்களின் எல்லையற்ற சுமையை குறைத்து, வறுமையை போக்குவதற்கு சிறந்த வேலைத் திட்டங்களை முன்னெடுப்பேன் என்றும் சஜித் குறிப்பிட்டார். (எ)

# யுக்திய நடவடிக்கையில் 623 பேர் சிக்கினர்

கொழும்பு, ஓக. 25

நாடளாவிய ரீதியில் நேற்றுக்காலை 10 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 623 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 611 ஆண்களும் 12 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 07 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ள ஒருவரை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 198 கிராம் 737 மில்லி கிராம் ஹெரோயின், 228 கிராம் 26 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 2,538 கிராம் 657 மில்லி கிராம் கஞ்சா ஆகிய போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# கொலை முயற்சிக்கு உதவியவர் கைது

காலி, ஹிக்கடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுற்றுலா ஹோட்டலுக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரி - 56 ரக துப்பாக்கியால் நபர் ஒருவரை சுட முற்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தொடந்துவ பிரதேசத்தை சேர்ந்த 32 வயதுடையவர் என்றும் இவர் கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு குற்றத்துக்கு உதவிய நபர் எனவும் பொலிஸார் கூறினர். (எ)

# சிறுவனை கடித்தும், அடித்தும் சித்திரவதை செய்த சிறியதாய்

நுவரெலியா,ஓக. 25

நுவரெலியா, லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளஹா தோட்டத்தில் வசிக்கும் 10 வயது சிறுவன் ஒருவன் தனது சிறியதாயால் கடந்த சில நாட்களாக கொடூர சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சிறுவன்மீது அடிக்கப்பட்டும் கடிக்கப்பட்டும் பல வகையான சித்திரவதைகளை சிறியதாய் ஏற்படுத்தியுள்ளதாகவும் அதனை விசாரித்து அறிந்த பாடசாலை சமூகத்தினர் லிந்துலை பொலிஸ் இணையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சித்திரவதைக்கு உள்ளான சிறுவன் லிந்துலை பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதே சமயம் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சிறுவனின் சிறியதாயை, பொலிஸார் வரவழைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தினர். விசாரணைகளை தொடர்ந்து குறித்த பெண் கைது செய்யப்பட்டு நுவரெலியா மாவட்ட நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டதாக லிந்துலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சிறுவனின் சிறியதாய் ஒரு குழந்தையின் தாய் என்றும் அவர் தற்போது கர்ப்பவதியும் கூட. கொடூர சித்திரவதைக்குள்ளான சிறுவனின் தாய் கொழும்பில் பணியாற்றி வருவதோடு சிறுவனின் சிறியதாயிடம் பாதுகாப்புக்காக விட்டுச் சென்றதாகவும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (எ)

# தமிழ் பொது...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது இயக்கத் தலைவர்களையும் உற்றுப்பினர்களையும் கொன்ற விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படப் பின்னிற்கவில்லை. இதற்கு மேலாக அவர்கள் இன்று மக்களால் தெரிவு செய்ப்பட்ட பிரதிநிகள். அவர்களை மக்கள் எவ்வாறு தெரிவு செய்தார்களோ அதேபோல தடம்மாறும்போது அதையும் மக்கள் பார்த்துக் கொள்வர்.

தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்ப்போர் முன்வைக்கும் இன்னொரு கருத்து அவ்வேட்பாளருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்காதுவிட்டால் அல்லது குறைந்தளவு வாக்கு விழுந்தால் தமிழ் மக்கள் அரசியல் உரிமைகளைக் கோரவில்லை எனச் சிங்களத் தலைவர்களுக்கு நாமே கூறுவது போலாகிவிடும் என்பது? உண்மைதான். ஆனால் மக்களை முன்னோக்கி அழைத்துச் செல்வது தானே தலைவர்களின் பணி. மக்களின் பின்னால் செல்வதல்லவே. இவ்வாறு இன்று கூறும் அரசியல் தலைவர்கள் மக்கள் எங்களுக்கு வாக்களிக்காதுவிட்டால் நாம் தோற்று விடுவோமே என்றெண்ணி தேர்தல்களில் போட்டியிடாமல் இருக்கவில்லையே. தேர்தலில் வெல்வோம் என்ற நம்பிக்கையில்தானே போட்டியிட்டார்கள். 1976 இல் தனிநாட்டுக் கோரிக்கையை தந்தை செல்வா முன்வைத்தபோது மக்கள் அதை நிராகரித்தால் என்ன செய்வது என்று நம்பிக்கையீனம் கொள்ளவில்லையே. அதேபோன்ற நம்பிக்கையுடன்தானே ஒருசில இளைஞர்களுடன் தொடங்கிய ஆயுதப் போராட்டம் உலகமே வியந்த நிழல் அரசாங்கத்தை உருவாக்கியது. உண்மையில் பொது வேட்பாளரை எதிர்போர் இவ்வாறான வாதங்கள் தங்கள் குறுகிய நோக்கங்களை அடைவதற்காக மக்களைத் திசை திருப்பும் கீழ்த்தரமான எத்தனமாகும். இவர்கள் இவ்வாறான வாதங்களை நல்ல நோக்கத்தில்தான் முன்வைக்கிறார்கள் என்றால் மக்களைத் திசைதிருப்ப முயல்வதற்குப் பதிலாக மக்களைப் பொதுவேட்பாளருக்கு ஆதரவளிப்பதற்கு தூண்டுவதன் மூலம் அந்த நோக்கங்களை அடையமுடியுமல்லவா?

பொதுவேட்பாளருக்கு வாக்களிக்குமாறு அழைப்பதன் மூலம் சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு விருப்பு வாக்கைப் பெற்றுக்கொடுப்பதே தமிழ் தேசியப் பொதுக்கட்டமைப்பின் உள்நோக்கம் என்பது இவர்களின் இன்னொரு குற்றச்சாட்டு. இதனை தமிழ்த் தேசிய முன்னணியின் பேச்சாளரும் அண்மையில் ஊடக நிகழ்ச்சி ஒன்றில் கூறியிருந்தார். அவருடைய கூற்றில் வாக்களிக்க வருபவர்கள் எல்லோரும் விருப்பு வாக்குகளைக் கட்டாயம் இட வேண்டும் என்ற கருத்து மேலோங்கியிருந்ததைக் காணமுடிந்தது. அது தவறானது. விருப்பு வாக்குகள் என்பவை ஒருவாக்காளர் தனது முதன்மைத் தெரிவுக்கு மேலதிகமாக வேறு ஒருவரை அல்லது இருவரைத் தெரிவுசெய்வதற்கானது. அது கட்டாயமானதன்று. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு தன்னால் நிறுத்தப்பட்ட பொது வேட்பாளருக்கு மட்டுமே வாக்களிக்குமாறு கோரிநிற்கிறது. அது எந்தச்சந்தர்ப்பத்திலும் இன்னொருவருக்கு விருப்பு வாக்கை அளிக்குமாறு கோரவில்லை. பதிலாக விருப்பு வாக்குகள் எவற்றையும் அளிக்கக் கூடாது என்றே வலியுறுத்தி வருகிறது. இவ்வாறு இருக்கும்போது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட முனைபவர்களை என்னவென்று கூறுவது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பாக தென்னிலங்கைத் தலைவர்களோ அல்லது இங்குள்ள அவர்களின் முகவர்களோ எதுவும் கூறிவிட்டுப் போகட்டும். அவை தொடர்பாக தமிழ் மக்கள் ஒருபோதும் அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் தமிழ்த் தேசியம் என்ற பெயரில் அரசியல் செய்பவர்கள் தாம் பொதுவேட்பாளர் தொடர்பாக வைக்கும் கருத்துக்கள் தொடர்பாக ஆழமாகச் சிந்திக்கவேண்டும். தங்களின் அரசியல் இருப்புக்காக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பதையும் புனைகதைகள் சோடிப்பதையும் மக்கள் நலன்சார்ந்து இந்நேரத்தில் தவிர்ப்பதே மேலானது. தமது மக்களுக்கு நன்மை செய்வதாகக் கூறி அரசியல் செய்யும் எவரும் இந்நேரத்தில் தீமையாதல் செய்யாது ஒதுங்கியிருப்பதே மேலானது. நாங்கள் சூட்டும் துரோகிப்பட்டம் திரும்ப மக்களால் எமக்குச் சூட்டப்பட அதிக நேரமாகாது.

# நிறைவேற்று அதிகார...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

“பொறுப்புக்கூறல் இல்லாத காரணத்தால் ஜனாதிபதி ஆட்சிமுறை விரும்பத்தகாத விளைவுகளைக் கொண்டுவந்தது. சகல இலங்கையர்களினதும் பொது நன்மைக்கு பாதகமான முறையில் ஏதேச்சாதிகாரத்தையும் ஊழலையும் தகுதியின்மையையும் அந்த ஆட்சிமுறை ஊக்குவித்தது.

“மிகவும் அண்மைக்காலத்தில் தவறான ஆட்சிமுறை மற்றும் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணிகளுக்கும் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கும் இடையிலான தொடர்பை மக்கள் தெளிவாகக் கண்டுகொண்டார்கள். அதனால் தான் 2022 அறகலய கிளர்ச்சியின்போது அவர்கள் முறைமை மாற்றத்தைக் கோரினார்கள். அந்த முறைமை மாற்றத்துக்கான முதற்படி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாகவே இருக்க முடியும்” என்று அவர்களின் அறிக்கை கூறுகிறது.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து வாக்குறுதியை வழங்குவதில் அரசியல்வாதிகளுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்துக்கு வந்த பிறகு அதை காற்றில் பறக்கவிடாமல் நடைமுறைப்படுத்துவதற்கான நேர்மையை எவரிடம் எதிர்பார்க்க முடியும் என்பதே இலங்கையர்களின் உண்மையான பிரச்சினையாகும்.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு என்றைக்குமே அரசியல் விவாதத்துக்கான ஒரு தொனிப்பொருளாக மாத்திரம் இருக்கப்போகிறது என்றே தோன்றுகிறது. இது கானல்நீரை விரட்டுவதற்கு ஒப்பானதாகும்.

அரசியல்வாதிகள் கூறும் பொய்களைப் பற்றி சிந்தித்தபோது காலஞ்சென்ற ரஷ்ய எழுத்தாளரும் சோவியத் அதிருப்தியாளருமான அலெக்சாண்டர் சொல்ஷெனிற்சின் அவர்களின் பிரபல்யமான வாசகம் ஒன்று நினைவுக்கு வந்தது.

“அவர்கள் பொய் பேசுகிறார்கள் என்பது எமக்கு தெரியும். தாங்கள் பொய்பேசுவது அவர்களுக்கும் தெரியும். தாங்கள் பொய்பேசுவது எங்களுக்கு தெரியும் என்பதும் அவர்களுக்கு தெரியும். தாங்கள் பொய்பேசுவது எங்களுக்கு தெரியும் என்று அவர்களுக்கு தெரியும் என்பது எமக்கும் தெரியும். ஆனால் இன்னமும் அவர்கள் தொடர்ந்து பொய் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளப்பு...

என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்மணி நேற்று முன் தினம் மாலை வீட்டுக்கு வெளியே வீதியில் நடந்து சென்றுகொண்டிருந் தார். இதன்போது அங்கிருந்த வளர்ப்புப் பன்றி ஒன்று அவரை கொடூரமாகத் தாக்கியது. இருதயம் வெளியே தெரியும் அளவுக்கு கடித்துக் குதறியது.

இதனால் படுகாயமடைந்த குறித்த வயோதிபப் பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசார ணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

## தமிழரசு...

விடுதலை இயக்கம் ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பது தொடர்பாகவும், பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பாகவும் இக்கூட்டத் தில் கலந்துரையாடப்பட்ட தாக தெரி விக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மட்டக் களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் கோவிந்தன் கருணாகரம், கட்சியின் ஊடக பேச்சாளர் சுரேன் குருசுவாமி, கட்சியின் தேசிய அமைப்பாளர் பிர சன்னா மற்றும் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் பின்னர் கருத்து வெளி யிட்ட ரெலோ பேச்சாளர் சுரேன் குருசுவாமி தெரிவிக்கையில்-

எமது கட்சியாகிய தமிழீழ விடுதலை இயக்கத்தின் மத்திய குழு கூட்டம் வவு னியாவில் தலைவர் செல்வம் அடைக் கலநாதன் தலைமையில் இடம்பெற்றது. கூட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் சம்பந்த மான விடயங்களை எப்படி கொண்டு செல்வது தொடர்பான கலந்துரையா டல் இடம்பெற்றிருந்தது.

குறிப்பாக பொது வேட்பாளர் கள மிறக்கப்பட்டதன் காரணமாக தென் பகுதியில் ஏற்படுகின்ற அழுத்தங்களி னால் தென்பகுதி வேட்பாளர்களிடமி ருந்து தொடர்ச்சியான பேச்சுவார்த்தைக் கான அழைப்புக்களும், கோரிக்கை களும் வருகின்றன.

இவ்வாறு தொடர்ச்சியாக வருகின்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பான விடயங் களை எவ்வாறு கையாள்வது பற்றி யும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

ஒரு வேட்பாளரை களம் இறக்கிய பின்னர் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தம் அதாவது தெற்கில் இருக்கின்ற வாக்குகள் சமமாக பிரிக்கப்படுகின்ற போது குறித்த பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் அதிகபட்ச வாக்குகளை வழங்கினால் அதன் ஊடாக தங்களுக்கு ஏற்படுகின்ற நிலைமை - குறிப்பாக இரண்டாவது வாக்கு எண்ணும் நிலை யில்கூட வெற்றியடைய முடியாது என்ற நிலைமையை அவர்கள் உணர்கின்றனர். ஆகவே பொது வேட்பாளரை களம் இறக்கியமை எமக்கு வெற்றி. இதற்குப் பின்னர் அவர்களிடம் இருந்து தொடர்ச்சியான அழைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி வேட்பாளர்கள் தொடர்பாக கட்சியில் பல்வேறு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. இருப்பினும் கட்சி எடுத்த ஒரு பொது முடிவில்தான் நாங்கள் அனைவரும் பயணிக்கின்றோம். - என்றார். (அ)

## 28ஆம் திகதி...

தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறை வேற்றுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 28ஆம் திகதி இரத்தினபுரி யில் நடைபெறவுள்ள பிரசார கூட்டத் தில் தலதா அத்துக்கோரள மேடையேறி ரணிலுக்கான தமது ஆதரவு நிலைப் பாட்டை வெளிப்படுத்த உள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

## ராஜபக்ஷ...

அத்துடன், ராஜபக்ஷக்கள் பக்கம் இருக்கும் நரிகள் ஊளையிடுவதை நிறுத்தாவிடின் தமது வாயும் சும்மா இருக்கப்போவதில்லை எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

“எமக்கு எதிராக சேறு பூசும் பிரசாரத்தை ராஜபக்ஷ தரப்பில் உள்ள சிலர் முன்னெடுக்கின்றனர். எமக்கும் கூறுவதற்கு நிறையவே உள்ளன என்பதை கூறிவைக்க விரும்புகின்றோம்.

சலூன் கதவு மூடப்படுமாம், அரசியலில் இருந்து ஓய்வு பெற்றால்கூட பரவாயில்லை, அந்த சலூன் கதவுப் பக்கம் நாம் செல்லவில்லை. முது கெலும்புடன்தான் வெளியேறினேன்.

ஜனாதிபதி சிறப்பாக செயற்பட்ட தால்தான் அவரின் காலை வாருவதற்கு முற்படுகின்றனர். நாமல் தரப்பின் தவறான முடிவால்தான் கட்சி பிளவுபட் டுள்ளது. ஒன்றாக இருந்ததால்தான் நாம் பொதுமேடைகளில் ராஜபக்ஷக்களை விமர்சிப்பதில்லை. ஆனால் கையாட் களை களமிறக்கி எம்மை விமர்சிக்க முற் பட்டால் இருக்கும் சொற்ப வாக்கு கள் கூட இல்லாமல்போகும் - என்றார். (அ)

## 10போக்குவரத்து...

தேர்தல் பிரசார அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இது குறித்து தெரிவித்தனர்.

மீண்டும் எரிபொருள் வரிசை ஏற்படு வதைத் தாம் விரும்பவில்லை என சுட் டிக்காட்டிய போக்குவரத்து சங்கத்தின் பிரதிநிதிகள், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்து சேவையை மேற்கொள்ள முடியாமல் தாம் எதிர் கொண்ட இன்னல்களை மறக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளா தாரத்தை மீட்க இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் ஜனாதிபதியி னால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தைப் பாராட்டிய போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதி கள், நாட்டை முன்னோக்கி கொண்டு சென்று மக்கள் நிம்மதியாக வாழக் கூடிய சூழலை உருவாக்கக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாத்திரமே எனவும் சுட்டிக்காட்டினர்.

இலங்கை தனியார் பஸ் உரிமையா ளர் சங்கம், மாகாணங்களுக்கு இடை யிலான பஸ் உரிமையாளர் சங்கம், பொதுஜன பெரமுன பஸ் சங்கம், கொள்கலன் சங்கம், அலுவலக போக்கு வரத்துச் சங்கம், அகில இலங்கை சாரதிகள் தொழிற்சங்கம், அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம், அகில இலங்கை பாடசாலை பஸ் சங்கம், ரயில் நிலைய அதிபர்கள் சங்கம், தேசிய டெக்சி முச்சக்கரவண்டி தொழில் துறையினர் ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியைச் சந்தித்து தமது ஆதரவை தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பஸ் உரிமை யாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டதுடன், அது தொடர்பில் ஆராய்ந்து விரைவான தீர்வுகளை வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (அ)

## யாழில்...

வீடுகள் காற்றினால் பகுதியளவில் சேத மடைந்துள்ளன.

மேலும் பருத்தித்துறை பிரதேச செய லகத்துக்குட்பட்ட பகுதியில் புலோலி நாகதம்பிரான் ஆலயமும் கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட உரும்பி ராய் சைவத் தமிழ் பாட சாலையும் சேத மடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. (அ)

## கௌரவமாக...

உரையாற்றுகையிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவு டன் தற்போது மக்கள் நிராகரித்த தரப் பினரே உள்ளனர். அதுவும் மக்கள் பணத்தை சுரண்டிய ரணில் விக்கிரம சிங்க சிறைக்கு அனுப்பும் வரை உறங்கப் போவதில்லை என கூறிய தரப்பினரே இப்போது ஜனாதிபதியுடன் இருக்கின்றனர்.

ஐக்கிய தேசிய கட்சியினரா தற் போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதி பதியுடன் உள்ளனர். இல்லை அல்லவா ? வீட்டிற்கு செல்லும் போதாயினும் ஐக்கிய தேசிய கட்சியை பதிவிட்டு விட்டு செல்லும் பொறுப்பு இருந்தது. ஆனால் ஐக்கிய தேசிய கட்சி சின்னத்தில் கூட இல்லை.

ஐக்கிய தேசிய கட்சியின் சின்னமான யானைச் சின்னம் குறைந்த பட்சம் 2005 இல் தேர்தல் பத்திரிகையில் மாத்திரமே இறுதியாக இருந்தது. ரணில் விக்கிரம சிங்க இந்த தேர்தலில் கூட யானைச் சின்னத்தில் போட்டியிடவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சியின் சின்னமான யானைச் சின்னத்தை தூக்கியெறிந்துள்ளார் என்றே கூற முடியும்.

தற்போது சிறிகொத்த தலைமையகத் தில் கூட யானைச் சின்னம் இல்லை. சஜித் பிரேமதாஸவை வீழ்ச்சிக்கு இட்டுச்செல்ல முயற்சிக்காது கௌரவ மாக வீட்டுக்கு செல்வதே ரணில் விக்கிர மசிங்க நாட்டு மக்களுக்கு செய்யும் சிறந்த உபாயமாக அமையும்-என்றார்.

## பொலிஸார்...

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பி லான தெளிவூட்டும் துண்டுப் பிரசுரம் வழங்கும் செயற்பாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப் பாளர் புஸ்பராஜ் துஷானந்தன் தலை மையில் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வ ராஜா கஜேந்திரன்,தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் உள்ளிட்ட பலரும் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரி வடக்கு-கிழக் கில் துண்டுப்பிரசுரம் வழங்கும் செயற் பாட்டில் ஈடுபட்டுள்ளதை ஏற்கமுடி யாது என அம்பாறை-திருக்கோவில் பகுதியில் துண்டுப் பிரசுரம் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தரப்பின ருக்கு பொலிஸார் இடையூறு விளைவித் துள்ளனர்.

அத்துடன் சம்பவ இடத்துக்கு வந்த திருக்கோவில் பொறுப்பதிகாரி தேர்த லைப் புறக்கணிக்கக் கோருவது சட்ட விரோதம் எனவும் நல்லிணக்கத்தோடு உள்ள திருக்கோவில் பகுதியில் இவ்வா றான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தினார்.

இதன்போது இரு தரப்புக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற் றுள்ளது. இதற்கு பதிலளித்த, கஜேந்தி ரன் எம்.பி. தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழ் மக்களுக்கு முறையான தீர்வு கிடைக்கவேண்டும் என்பதையே தாம் வலியுறுத்துவதாகவும் கூறியுள்ளார். (அ)

## யாழ்ப்பாண...

முதலாவது இடத்தை பெற்று கல்லூ ரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவரின் பயிற்றுவிப்பாளராக ஜெக நாதலிங்கம் லக்ஷ்மன் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கு...

தமிழர்களின் பிரச்னை ஏற்கனவே சர்வதேச மயப்படுத்தப்பட்டுவிட்டது. இனியும் சர்வதேச மயப்படுத்துவதற்கு ஒன்றுமில்லை.

இன்னுமொருவருக்கு வாக்கு சேர்ப் பதற்கான உபாயமாக தமிழ் பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் உள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது எடுபிடிக ளாக இவர்களை பயன்படுத்தக்கூடும்.

பொது வேட்பாளர் விவகாரத்தை விக்னேஸ்வரன்தான் அதிகம் பேசி திரிந்தார். அவர் திடீரென ஜனாதிபதி யின் விசுவாசியாக மாறினார். நாடாளு மன்றத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களித்தார். சிலருக்கு தமிழரசுக் கட்சியுடன் பகை உள்ளது. அதற்கான பழிவாங்கல் நடவடிக்கையாக இதனை செய்திருக்கலாம். சில போராளிக்கட்சி தலைவர்கள் இது விடயத்தில் கையறு நிலையில் உள்ளனர்.

தமிழ் மக்களின் வாக்கு வங்கியை விரயமாக்கும் வேலையே இந்த பொது வேட்பாளர் விவகாரமாகும். வடக்கு, கிழக்கு தமிழர்கள் புத்தி கூர்மையான வர்கள், விவேகமானவர்கள். எனவே, மக்கள் உரிய முடிவை எடுப்பார்கள். வெல்லும் வேட்பாளரை வைத்து சாத்தியமான விடயங்களை சாத்திய மாக்கிக்கொள்வதற்கு முற்பட வேண் டும்-என்றார். (அ)

## மரப்...

பணியில் தேர்தல் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் பதிவு செய் யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக் கையைப் பொறுத்து வாக்குப்பெட்டி கள் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவுகளில் தயாரிக்கப்பட்டு வாக்குச் சாவடிகளுக்கு அனுப்பப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் தெரிவித் துள்ளதாவது-

கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அட்டைப் பெட்டிகள் மாத்திரமே பயன்படுத்தப் பட்டன. 2020 பொதுத் தேர்தலில், மர மற்றும் அட்டைப் பெட்டிகள் பயன் படுத்தப்பட்டன.

நாங்கள் இந்த முறை அட்டைப் பெட்டிகளை மட்டுமே பயன்படுத்து வோம் - என்றார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு சுமார் 10 பில்லியன் ரூபாய் போதுமானதாக இருக்குமா என அவரிடம் வினவிய போது, 8 பில்லியன் ரூபாய் மட்டுமே செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள் ளது எனவும் அவர் கூறினார்.

“அரச நிறுவனங்களில் இருந்து வாகனங்களை வாடகைக்கு பெறும் போது நல்ல நிலையில் உள்ள வாகனங் களை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண் டும். தேர்தலின்போது நாங்கள் அவற் றின் பழுது பார்ப்புக்கு பணம் செலுத்த முடியாது.

முன்னதாக, பல்வேறு அரச நிறுவ னங்கள் பழுதுபார்க்க வேண்டிய சில வாகனங்களை எங்களுக்கு அனுப்பி வந்தன. பின், அவற்றை எங்கள் செலவில் சரி செய்து, தேர்தல் தொடர்பான பணி களுக்கு பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தமுறை அவ்வாறு செய்யமாட்டோம்.” - என்றார் அவர்.


வாக்காளர்களின் விரல்களில் அழி யாத அடையாளங்களுக்கு பயன்படுத் தப்படும் மை, இந்த முறை இறக்குமதி செய்வதற்கு பதிலாக உள்ளூர் விநியோ கத்தர்களிடமிருந்து பெறப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நாணய நிதிய உடன்படிக்கையை மாற்றினால் நாடு மீண்டும் வீழ்ச்சி!

## மட்டக்களப்பில் ஜனாதிபதி எச்சரிக்கை




மட்டக்களப்பு, ஓக. 25

சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை மாற்றியமைத்தால் நாடு மீண்டும் வீழ்ச்சி காணும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இயலும் ஸ்ரீலங்கா என்னும் தொனிப்பொருளில் இன்று மட்டக்களப்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

நெருக்கடி காலத்திலேயே நான் நாட்டை பொறுப்பேற்றேன். எதிர் கட்சித்தலைவர் தான் மாற்று பிரதமர் அவருக்கு ஒரு கடமை இருக்கின்றது நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு. மக்கள் நெருக்கடியில் இருந்த சந்தர்ப்பத்தில் எதிர்கட்சித்தலைவர் சஜித் ஓடி ஒழிந்து கொண்டார். அவர் மக்கள் தொடர்பில் சிந்திக்கவில்லை.

அநுரகுமாரவையும் தேடிக் கொள்ள முடியவில்லை. இத்தகைய பின்னணியில் நாம் நாம் நாணய நிதியத்தை நாடினோம். அங்கு கடினமான தீர்மானங்களை எடுக்க நேரிட்டது. உள்நாட்டு கடன் பெறுதல்,வங்கிகடன் எடுத்தல், பணம் அச்சிடல் என்பவற்றை மேற்கொள்ள முடியாது என்ற வரையறை விதிக்கப்பட்டது.

இதன் விளைவாகவும் மக்கள் சுமையை ஏற்றுக்கொண்டமையின் விளைவாகவும் நாட்டின் தல தேசிய உற்பத்தி அதிகரித்தது. அதன் காரணாமாக நிவாரணங்களை மக்களுக்கு வழங்க முடிந்தது. சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட 18 நாடுகளுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாம் கடனை மீள செலுத்துவதற்காக 2048 வரை தவணை வழங்கப்பட்டுள்ளது. அது மாத்திரமல்லாது 10 பில்லியன் டொலர் கடன் நிவாரண சலுகை வழங்கப்பட்டுள்ளது. நாம் இதனை முன்னெடுத்து செல்லவேண்டும்.

இந்த உடன்படிக்கையை மாற்றப்போவதாக சஜித் கூறுகின்றனார் .அவ்வாறு செய்தால் அவர்கள் வழங்கும் சலுகைகள் நிறுத்தப்படும் ருபாய் வீழ்ச்சி காணும். எரிபொருள் எரிவாயு இல்லாமல் போகும். நாடு மீண்டும் நெருக்கடிக்குள் வீழ்ச்சியடையும்- என்றார். (அ)

## இயக்கச்சி சந்திப் பகுதியில் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஓக. 25

ஏ-9 வீதி கிளிநொச்சி இயக்கச்சி சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த குளிரூட்டப்பட்ட பஸ், இரவு 10.30 மணியளவில், வீதியால் நடந்து சென்ற ஒருவர் மீது மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

வீதியில் நடந்து சென்ற நபர் மதுபோதையில் வீதியின் நடுவே நின்று பஸ்ஸை மறித்ததாகவும், இதன் போது பஸ்ஸின் நடத்துநர் மறித்தவரை வீதியை விட்டு விலகி நிற்குமாறு கூறிவிட்டு பஸ்ஸை எடுக்க முற்பட்ட போது, குறித்த நபர் தடக்கி விழுந்த நிலையில் விபத்து ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவத்தில் பரந்தன் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## முன்னாள் அமைச்சர் ருக்மன் காலமானார்

கொழும்பு, ஓக. 25

நாட்டின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கவின் பேரனும் முன்னாள் அமைச்சருமான ருக்மன் சேனாநாயக்க நேற்று தனது 76ஆவது வயதில் காலமானார்.

இவர் 2002ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சராக பதவி வகித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவராகவும் ருக்மன் சேனாநாயக்க பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## புனர்வாழ்வு அளிக்கப்பட்ட புலிகள் கட்சி ரணில் பக்கம்

வவுனியா, ஓக. 25

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சி தெரிவித்துள்ளது.

முன்னாள் போராளிகள் தொடர்பான கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் இதனால் தமது ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கே எனவும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் க. இன்பராசா தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சியின் ஊடக சந்திப்பு வவுனியாவில் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ)

## அனைத்து பாடசாலைகளும் டிஜிற்றல் மயமாக்கப்படும்!

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 25

நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளும் எதிர் வரும் மூன்று வருடங்களில், டிஜிற்றல் மயமாக்கப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் முதல்தரமாக இயங்கும் 1250 பாடசாலைகளை ஒரே வலையமைப்பிற்குள் கொண்டுவரும் திட்டம் எதிர்வரும் வாரங்களில் நடைமுறைப்படுத்தப்படும். சர்வதேச ரீதியான சவால்களுக்கு முகம்கொடுக் கும் வகையில் எமது நாட்டில் கல்வித்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

கல்வித்துறையில் மாற்றம் என்பது, பாடசாலைகளுக்கு டிஜிட்டல் கணணிகளை வழங்குவது மாத்திரமல்ல. அதை தவிர, பாரிய செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

2022ம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக கல்வித்துறையிலும் பாதிப்பு ஏற்பட்டது. எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தூர நோக்கத்துடனான செயற்பாடு காரணமாக பாதிப்பிலிருந்து மீளக்கூடியதாக இருந்தது - என்றார். (அ)

## புதுப்பிக்கப்படாத லைசன்ஸ்களை இரத்துச் செய்வதாக முடிவு இல்லை

கொழும்பு, ஓக. 25

புதுப்பிக்கப்படாத அனைத்து சாரதி அனுமதிப் பத்திரங்களையும் இரத்து செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவை எனவும், அவ்வாறு எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை எனவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் முதல் சாரதி அனுமதிப் பத்திரம் 60 காலப்பகுதிகளில் வழங்கப்பட்டது.

அதன்பிறகு, சுமார் 12.3 மில்லியன் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில், 60 களில் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கு காலாவதி திகதி இல்லாததால், அந்த அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்காமல் பயன்படுத்தலாம்.

எனவே, சுமார் 2 மில்லியன் சாரதி அனுமதிப் பத்திரங்களை வைத்திருப்பவர்களின் தகவல்கள் புதுப்பிக்கப்படவில்லை.

போக்குவரத்துத் துறை தொடர்பான அனைத்து சேவைகளும் தற்போது டிஜிற்றல் மயமாக்கப்பட்டு வருகின்றன.

மேலும் சாரதிகளுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள புள்ளிகள் குறைத்தல் முறைமை மற்றும் குறித்த இடத்திலேயே அபராதம் செலுத்துவதற்கான பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன.

2025 ஜனவரி 01 முதல் இந்தப் புள்ளி குறைக்கும் புதிய முறை மற்றும் குறித்த இடத்திலேயே அபராதம் செலுத்துதல் உள்ளிட்ட புதிய வழிமுறை மூலம் நடைமுறைப் படுத்தப்படும். இதற்கு அனைத்து சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்களின் புதுப்பிக்கப்பட்ட தகவல்களும் அவசியமாகும்.

அதன்படி, இதுவரை புதுப்பிக்கப்படாத சுமார் 02 மில்லியன் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களின் தகவல்களை புதிப்புக்க ஒரு பொறிமுறையை மிக விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

அதற்காக புதிய மருத்துவ அறிக்கைகளைப் பெறவோ அல்லது மோட்டார் வாகனத் திணைக்களத்தற்கு வருகை தரவோ அவசியமில்லை.

புதிய முறைமையின் கீழ் அனைத்து சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்களின் தகவல்களையும் இந்த ஆண்டு இறுதிக்குள் புதுப்பிக்க எதிர்பார்க்கிறோம்.

அது தவிர, புதிய சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது அல்லது ஏற்கனவே உள்ள சாரதி அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படமாட்டாது.

இது தொடர்பாக வெளியாகும் பிரசாரங்கள் முற்றிலும் தவறானவை என்பதைக் கூறவேண்டும் - என்றார். (அ)

## இலங்கை ஜனநாயக முன்னணி சஜித் பிரேதாஸவுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 25

இலங்கை ஜனநாயக முன்னணி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேதாசாவிற்கு தமது ஆதரவை வழங்குவதாக நேற்று தமது கட்சியின் முடிவை அறிவித்துள்ளது.

அக் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களுடான கலந்துரையாடலின் பின்னர், இவ் அறிவிப்பை அவர்கள் வெளியிட்டனர். (அ)

## பணம் வசூலிக்கும் போலி அதிகாரிகள்

### இறைவரி திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 25

தனிநபர்கள் சிலர் தங்களை அதிகாரிகளாக அடையாளம் காட்டி சட்டவிரோதமான முறையில் வர்த்தக நிறுவனங்களில் பணம் வசூலிப்பதாக வெளியான தகவலை அடுத்து, உள்நாட்டு இறைவரி திணைக்களம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு, பாணந்துறை, நீர்கொழும்பு, வென்னப்புவ, மினுவாங்கொடை உள்ளிட்ட பிரதேசங்களில் இந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரிலான வங்கிக் கணக்குகளில் வைப்புத்தொகை மூலம் மட்டுமே வரி செலுத்துதல்களை மேற்கொள்ள வேண்டும் என தெளிவுபடுத்தியுள்ளது.

எந்தவொரு பணமும் அல்லது காசோலைகளும் தங்கள் அதிகாரிகளால் நேரடியாக வசூலிக்கப்படுவதில்லை என்றும் அதிகாரிகள் போல வரும் நபர்களிடம் பணத்தை ஒப்படைக்கவேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் நடந்தால் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்குமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

## 30,000 விபசாரிகள் அடையாளம்!

கொழும்பு, ஓக. 25

இலங்கையில் தற்போது 30,000 விபசாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

மேற்கொண்ட ஆய்வின்படி , கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், நாட்டில் சுமார் 80,000 ஓரினச்சேர்க்கையாளர்கள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

தேசிய பாலியல் நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தனது சமீபத்திய தரவுகளில் இதனைத் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.